

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

11. மண்ணிலே இறங்கிய விண்ணுலகம்

மோட்ச லோகத்துக்கு எத்தனையோ ஏணிகள், எத்தனையோ சமய
...ாதிகளால் தயார் செய்யப்பட்டிருக்கின்றன! "இந்த லோகத்திலுள்ள
...தறைபாடுகளை யெல்லாம் நிறை செய்யும் பரிபூர்ண லோகம் அது: அங்கே
...றிப் போய்விட்டால் ஒரு கவலை கிடையாது, ஒரு பயம் கிடையாது;
...ரே பேரின்பம்தான்!" என்று கருதித் தானே அத்தனை ஏணிகள்
...ார்த்தப் பட்டிருக்கின்றன?

ஆனால் அந்தப் பரலோகத்தில் இருப்பவர்களோ, "ஏற வைத்த ஏணி
...ழியாக இறங்கி வந்து விடலாமா?" என்று யோசிக்கிறார்களாம். "இது
...ன்ன ஹாஸ்யம்? என்ன விநோத விபரீத யோசனை! என்ன நாஸ்திக
...த்தி!" என்றெல்லாம் ஆஸ்திகர்கள் அதிசயப்படலாம்.

அப்படியானால் அவர்கள் கம்ப ராமாயணம் நகரப் படலத்தின் முதற்
...செய்யுளை வாசித்துப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே வாசித்திருந்தாலும்
...அப்படியும் ஊன்றிப் பார்க்க வேண்டும்:

செவ்விய, மதுரம் சேர்ந்தன, பொருளில்
சீரிய, கூரிய, தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்தது; வரம்பில்
எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ்செய்(து)
ஏறுவான் ஆதரிக்கின்ற
அவ்வுலகத்தோர் இழிவதற்(கு), அருந்தி
புரிகின்ற(து) அயோத்திமா நகரம்.

[செவ்விய—அழகையுடையன. சீரிய—சிறப்பையுடையன. கூரிய—
...ர்மையாகவுள்ள. தீஞ்சொல்—இனிமையான சொற்கள். வவ்விய—
...ர்த்து வாரிக்கொண்ட. வடநூல் முனிவர்—சம்ஸ்கிருத சாஸ்திரங்களில்

வல்ல மகரிஷிகள். வரம்பில்—அளவில்லாத. ஆதரிக்கின்ற—ஆசைப்ப
கிற. இழிவதற்கு—இறங்குவதற்கு. அருத்தி—ஆசை.]

பூலோகம் முதலிய பல உலகங்களி லிருந்தும் ஏணி வைக்கப் பா கிறார்களாம் பரலோகத்தை நோக்கி. அந்த ஏணிகளுக் கெல்லாம் பொ வாகத் தவம் என்ற ஒரு பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது, இந் பாட்டிலே. "அப்படி ஒரு ஏணி கிடைத்தால்..." என்று அந்தப் பரமண்ட வாசிகளும் யோசிக்கிறார்களாம். "நாம் இறங்கி விடலாமே அயோத்தி நகரத்திற்கு!" என்றுதான் ஆசைப்படுகிறார்களாம்; தவம் செய்யப் பா கிறார்களாம்.

மீளா வழியிலிருந்தும் இப்படி மீளச் செய்வது அயோத்தி என் அதன் அதிசய வளத்தையும் வனப்பையும் எடுத்த எடுப்பிலே உய்த்துண வைக்கிறான் கவிஞன்.

கல்லது: "இந்துக்களுக்கு மறுலோக மனப்பான்மை வரம்பில்லா இருக்கிறது" என்று பழிப்பவர் பழிக்கிறார்கள். கம்பனோ, "பரலே வாசிகளுக்கும் இகலோக மனப்பான்மை வந்து விட்டது, அயோ யைப் பார்த்ததும்!" என்று பாடுகிறான்.

எதிர்கால உலகம் தான்

இத்தகைய அயோத்தி, பூமி சாஸ்திரத்திலோ, தேச சரித்தி திலோ வரும் ராஜதானி அன்று; வால்மீகி மகரிஷி வருணித்திருக் அயோத்தியும் அன்று. மகரிஷிகளெல்லாம், மகா கவிகளெல்லாம், தீர் தரிசனமாகக் கண்டதும் காண்பதுமான எதிர்கால உலகமே, கம்பன் கண் கோசலமும் அயோத்தியும்.

இத்தகைய காட்சிகளையும் கனவுகளையும் சொற்களாகிய வலை வீ பிடிக்கிறார்களே கவிஞர்கள், — அந்தக் கவிதை என்ற சொற் கலை லட்சணத்தையும் ஒருவாறு வெளியிடுகிறான் கவிஞன் இந்தப் பாட்டிே செவ்தரிய உணர்ச்சியும் மதுரமும் தோய்ந்ததாக வந்து விழ வேண்டு பொருள் பொதிந்த கூர்மையான சொற்கள், — கவிஞன் அனுபவிக் பொருளை அப்படியே கேட்பவர் இதயத்தில் சேர்த்து விடுவதற்கு. தகைய சொற் செல்வத்தைக் கவிஞன் எப்படியோ, எங்கிருந்தோ திருமக மன்னனைப்போல் கொள்ளை யடித்துக் கொண்டு வந்து விடுகிறானாம்.

இத்தகைய கவிதைக் கண்ணாடியில் முகம் காட்டும் லட்சிய அே தியை,

24 நிலமகள் முகமோ? திலகமோ? கண்ணோ?
நிறைநெடு மங்கல நாணோ? (இ.எ.)

[நிறை நெடு மங்கல நாணோ—நிறைந்த, நீண்ட, மாங்கல்ய திரமோ.]

என்றெல்லாம் நிறைய வருணித்துக் கொண்டே போகிறான். ஏன்?—

செங்கண்மால் பிறந்(து)ஆண்(டு), அளப்பருங் கால
திருவின்விற் றிருந்தனன் என்றால்,—

[செங்கண்மால்—சிவந்த கண்களையுடைய மகாவிஷ்ணு. அளப்பருங் காலம்—அளவிட முடியாத காலம். திருவின்—லட்சுமியோடு; (இங்கே) ஸீதா லட்சுமியுடன்.]

இந்த அவதாரமூர்த்தியின் ராஜதானி நகரத்திற்கு எந்த உபமானம் தான் சொல்ல முடியும்? — என்பது மன நிலை.

ராமன் பிறப்பதற்கு முன்பே அயோத்தி ராம ராஜதானி தான் கம்பனுக்கு; கோசலம் ராம ராஜ்யம் தான்: "பரலோகத்திலிருந்து அவதார மூர்த்தியே வந்து இறங்கப் போகிறது!" என்று ராஜ்யத்தையும் ராஜதானியையும் ஜோடனை செய்ய வருவது போல வருகின்றன வருணனைகளெல்லாம். ஏன்? அவதார மூர்த்தி வருவதற்கு முன்பே அந்த மூர்த்தியின் பரமபத ராஜ்யம், தானே பூலோகத்திற்கு இறங்கி வந்து அந்த வருகையை எதிர்பார்த்திருப்பது போலவும் தோன்றுகிறது.

அயோத்திமா நகரத்திலே குடிகள் வசிக்கும்



பெருஞ் சிறப்பும், "பரமபத ராஜ்யம் பூமிக்கு வந்து விட்டது!" என்பன்த ஞாபகப் படுத்துகிறது :

வானுற நிமிர்ந்தன;
வரம்பில் செல்வத்த;
தானுயர் புகழெனத்
தயங்கு சோதிய;
ஊனமில் அறநெறி
உற்ற; எண்ணிலாக்
கோன்நிகர் குடிகள்தம்
கொள்ளை சான்றன!

[வான்உற—வானத்தை அளாவ. வரம்பில் செல்வத்த—அளவில்லாத செல்வத்தை உடையன. புகழென—புகழைப் போல. தயங்கு—விளங்குகிற. சோதிய — ஜோதி உடையன. ஊனமில் — குற்றமற்ற. உற்ற—பொருந்தின. எண்ணிலா—எண்ண முடியாத. கோன்—அரசன். நிகர்—ஒத்த. கொள்ளை—மிகுதி. சான்ற— நிறைந்தன.]

வானளாவிய செல்வ மாளிகைகளில் வானளாவிய புகழோடு வாழும் பெரு மக்களைப் பார்க்கிறோம். அந்த மாசிலா வெண் புகழின் அறிகுறியாக விளங்குகிறதாம் மாளிகைகளின் ஜோதி. இந்த மாளிகைகளில் தர்ம ஜோதியான உள்ளங்களைச் சந்திக்கிறோம். "இந்த ராஜதானியில் அரசன் ஒருவனில்லை; எண்ணில்லாத அரசர்கள் இருக்கிறார்கள்!" என்ற பிரமிப்பும் ஏற்படுகிறதாம். என்ன?

குடிகளில் ஒவ்வொருவரும் இந்த நாட்டு மன்னனைப் போலவே பெரு வாழ்வு வாழ்கிறார்களாம் :

... எண்ணிலாக்
கோன்நிகர் குடிகள்தம்
கொள்ளை சான்றன!

—என்ன புதுமையான கொள்கை, பாருங்கள்! புதுமைக் கவியான பாரதி சொல்லுகிறாரே, "நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்!" என்று. இதே எதிர்கால அரசியல் - கொள்கை, ராம ராஜதானியில் அனுஷ்டானத்தில் இருக்கிறதாம்.

கலா மோகினிகள்

இத்தகைய "ஜோதி மாளிகை"கள் இரவிலும் இப்படி ஒளி வீசுகின்றனவே, இந்த ராஜாங்கத்திலே? நெய் விளக்கா, மாணிக்க விளக்கா? கவிஞனுக்கும் சந்தேகம் ஏற்பட்டுத்தான் தெளிகிறது :

திணிசுடர் நெய்யுடைத்
திவி ளக்கமோ?
மணிவிளக்(கு) அல்லன;
மகளிர் மேனியே!

[திணி—செறிந்த. விளக்கம்—விளக்கு.]

"நெய் விளக்கு வேண்டாம்; மணி விளக்கும் வேண்டாம் இந்த மாளிகைக்கு; இந்தப் பெண்மணியின் மேனியாகிய சுடர் விளக்கே

யாதும்!" என்று தோன்றுகிறதாம். இப் பெண்களின் ஜோதிக்குக் காரணமோ, உள்ளத்திலே ஒளிரும் தர்ம மயமான சௌந்தரிய ஜோதி — என்பது தெரிந்தது தானே, இந்தத் தர்ம ராஜ்யத்திலே!

இப் பெண்மணிகளில் சிலர் கலாமோகினிகள். இவர்கள் சித்திரம் எழுதும் காட்சி ஒன்றைக் கவிஞன் காட்டுகிறான்,

26 தொழுதகை மடந்தையர்
  சுடர்வி ளக்கெனப்
பழுதறு மேனியைப்
  பார்க்கும் ஆசைகொல்,
எழுதுசித் திரங்களும்
  இமைப்பி லாதவே? (143) (க. 142)

[தொழுதகை—தொழத் தக்க தன்மை. மடந்தையர்—பெண்கள். பழுதறு—பழுதற்று விளங்குகிற. ஆசை கொல்—ஆசைதானோ.] என்று கேட்டுக் கொண்டே.

இவர்களைப் பார்த்ததும் தொழ வேண்டுமென்று தோன்றுகிறதாம். ஏன்? "இவர்களைத் தொழுதுதானே நோக்குகிறோம்!" என்று கூடச் சொல்லலாம். அத்தகைய தெய்விக அழகு, கம்பன் கண்ட எதிர் காலத்திலே—ராம ராஜ்யத்திலே.

இவர்கள் தாங்கள் எழுதும் சித்திரங்களிலேயே ஈடுபட் டிருக்கிறார்கள். எழுதுகோல் தொடத் தொட, அந்தச் சித்திரங்கள் அப்படியே உயிர் பெறுகின்றன.

உயிர் பெற்று, அவை கண் மலர்ந்து முகம் மலர்ந்து அப் பெண்மணிகளை நோக்குகின்றன. ஆனால் "கண் இமைக்க வில்லையே! சித்திரம் தானோ?" என்ற சந்தேகமும் ஏற்படத்தான் செய்கிறது நமக்கு.

கவிஞனே நம்மை நோக்கி,

சுடர்வி ளக்கெனப்
பழுதறு மேனியைப்
  பார்க்கும் ஆசைகொல்? (142) (க. 142)

என்று வேறொரு சந்தேகக் கேள்வி போடுகிறான். "அந்தச் சுடர் மேனியைப் பார்க்கும் ஆசையினால் தானோ, அவை அப்படிக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே யிருக்கின்றன?" என்ற அந்த அதிசயமான சந்தேகத்திலேதான், அந்தக் கலா சுந்தரிகளின் சௌந்தரியமும் சிருஷ்டி-சக்தியும் எவ்வளவு தெளிவு பெறுகின்றன! எழுதுகோல் பிடித்த சித்திரக் கையும், சிருஷ்டி-உத்ஸாகத்தோடு கூடிய அந்தச் சித்திர நோக்கும் அப்படியே பிரசன்னமாகின்றன!

"இவர்கள் பூலோகத்தையும் பரமபத ராஜ்யமாகச் சித்திரிக்கக் கூடியவர்தான்! என்று கூடத் தோன்றுகிறது. ராமராஜ்யத்தின் தவப் புதல்விகளான இக் கலா மோகினிகளைப் பார்த்ததும், விண்ணும் மண்ணும் இணைப்பதற்குத் தவம் என்ற அவ்வளவு கஷ்டமான ஏணிகூட வேண்டாம்; கலை என்ற மோகன ஏணியே போதும்! — என்ற தோன்றுகிறது. ஆனால் அதுவும் கலைஞர்களின் தவம்தானே?



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

12. கல்பகம் கனிந்தது

பொருளைக் கொட்டி அளந்து கொண்டிருக்கிறார்களாம், ஒரு மண்டபத்திலே. வேறொரு மண்டபத்திலே, அன்னம் போல் நடந்து வந்த மாதர்கள் நடனம் செய்துகொண்டிருக்கிறார்கள், கலைஞர்கள் களிக்கும்படி. நாவிலே நடனம் செய்கின்றன வேத வேதாந்தங்கள் என்று சொல்லும்படி, அவற்றை ஓதி விவகரித்துக் கொண்டிருக்கிறார்கள் அறிஞர்கள், நாம் பார்க்கும் மூன்றாவது மண்டபத்திலே. நாலாவது மண்டபமும் வித்தியா மண்டபம் தான்; ஆனால் கலைக் கழகம். இங்கே கலைகள் நடம் புரிகின்றன, கலைஞர் இதயங்களிலே :

27 மன்னவர் தருதிறை
அளக்கும் மண்டபம்;
அன்னமென் னடையவர்
ஆடும் மண்டபம்;
உன்னரும் அருமறை
ஓது மண்டபம்;
பன்னருங் கலைதெரி
பட்டி மண்டபம். (க. 154)

[திறை — கப்பம். மென்னடையவர் — மெல்லிய நடையையுடைய பெண்கள். உன்னரு — நினைத்தற்கும் அருமையாகிய. அருமறை — (இங்கே) வேதாந்தம். பன்னரு — எடுத்து உரைப்பதற்கும் அருமையாகிய. தெரி — தெரிவதற்கு இடமான. பட்டி மண்டபம் — வித்தியா மண்டபம்.]

இப்படி எத்தனையோ மண்டபங்கள், — சொல்லி முடிக்கவும் முடியாதபடி! இத்தகைய மண்டபங்களிலே அயோத்தியின் நாலு முக்கிய அரசியல் இலாகாக்களைக் குறிக்கும் நால்வகை மண்டபங்களைத்தான் கவிஞன் சுட்டிக் காட்டுகிறான்.

திருமகளின் நடன மேடையாக ஒரு மண்டபத்தைக் காட்டிவிட்டு
கலைமகளின் நடன மேடைகளாக மூன்று மண்டபங்களைக் காட்டுவதால்
பொருட்செல்வத்தைக் காட்டிலும் மும்மடங்கு பொலிகின்றது கலை
செல்வம் ராம ராஜதானியிலே — என்பது குறிப்பு.

அறிவுக் கல்வியும் அழகுக் கல்வியும்

கலைகளைக் கவிஞன் இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகிறான்



நினைத்தற்கும் அரிய (உ
ணரு) அருமறை என்பது வே
ந்தம்; தத்துவ ஞான ஆராய்ச்
முதலிய அறிவுக் கலைகள். எ
த்து உரைப்பதற்கு அரி
(பன்னரு) கலைகளோ, சிற்ப
சித்திரம் நடனம் சங்கீ
கவிதை ஆகிய அழகுக் கல
கள்.

இந்த இருவகைக் கலைகளு
வாழ்க்கைக்கு இன்றியமை
தன. அறிவுக் க
கள் அறிவு
பயிற்சி தரு

றன. அறிவுச் செல்வத்தைத் தேடிக் குவிக்கவும் அளக்கவும் உதவுகின்றன. அளந்து பார்த்து, 'அறியாமை'யை அறிந்து கொள்ளவும் உதவுகின்றன! அழகுக் கலைகளோ சௌந்தரிய உணர்ச்சியைப் பெருக்கி வாழ்க்கைக்கு வளமும் வனப்பும் ஊட்டுகின்றன. அயோத்திவாசிகள் அறிவுக் கல்வியைப் போற்றுவது போல், இதயத்தை வசீகரித்து மலரச் செய்யும் அழகுக் கல்வியையும் காதலிக்கிறார்கள்.

அழகுக் கலைகளில் நாட்டியக் கலைக்கு மட்டும் தனி மண்டபம்-என்பது கவனிக்கத் தக்கது. அழகுக் கலைகளுக்கெல்லாம் வேராகவுள்ள பரத நாட்டியத்தை எவ்வளவு விசேஷமாய்ப் போற்றுகிறார்கள் அயோத்தி வாசிகள்!

நகர நிர்மாணமும் மாளிகைகளின் அமைப்பும்கூட, அவர்களிடையே வளரும் அறிவுக் கல்விக்கும் அழகுக் கல்விக்கும், ஒருங்கே சாட்சி சொல்லுகின்றன. ஜனங்களின் வாழ்க்கை முறை, குணநிசயங்கள், பொழுது போக்குகளுங்கூட இந்த இருவகைக் கல்விச் சிறப்பிற்கும் சான்று தருகின்றன. வாழ்விலே பூத்த கல்வி; கலையோடு கலையாகப் பூத்த வாழ்வு!

கீத விநோதங்கள்

அதோ அறிவு-நிலயமான ஒரு மாளிகையிலே பாருங்கள், அருங் கலை விநோதர்களான பெண்கள் பாடிக் கொண்டிருப்பதை. குரலோடு ஒன்றுபட்டு இசைக்கின்றன மகர யாழ் முதலிய இசைக் கருவிகள். அவர்களுடைய இதயத்திலே உள்ள காதல் துயரம் உத்ஸாகம் நம்பிக்கை முதலிய உணர்ச்சிகளெல்லாம் பாட்டாகப் பொங்குகின்றன.

அந்த வாய்ப் பாட்டோடு யாழின் இசையும் ஆரோகண அவரோகணக் கிரமத்திலே நிமிர்ந்தும், இறங்கியும் செல்லுகிறது. அதற்கு இசைய மத்தளங்களும் ஒலி செய்கின்றன.

மேலும் என்ன நடக்கிறது? பார்த்துக்கொள்ளுங்கள்:

இறங்குவ, மகரயாழ்
    எடுத்த இன்னிசை;
நிறங்கிளர் பாடலால்
    நிமிர்வ; அவ்வழி
கறங்குவ, வள்விசிக்
    கருவி: கண்முகிழ்த்(து)
உறங்குவ மகளிரோ(டு)
    ஓதும் கிள்ளையே!

[நிறம் — (இங்கே) நெஞ்சு; உயிர் நிலை. கிளர் — மேல் எழுகின்ற; ஓங்கி வருகிற. நிறங்கிளர் — உள்ளக் கிளர்ச்சியோடு வருகிற. அவ்வழி — அந்த இசைக்கு ஏற்றபடி. வள்விசிக் கருவி — தோல்வார் கட்டியுள்ள மத்தளம். முகிழ்த்து — மூடி. கிள்ளை — கிளி.]

இப்படிப் பெண்கள் பாடிக்கொண் டிருக்கும் போது, அவர்கள் வளர்க்கும் கிளிகளும் பக்கத்திலே யிருக்கின்றன, — 'கிளிகள் வளர்த்த

கிளிகள்' என்று சொல்லும்படி. அவர்களோடு பாட்டையும் ஒ
வருகின்றனவாம். "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" அல்லவா
எனினும் அந்த இசை - விருந்தால் அப்படியே மயங்கிக் கிளிகள் கண் மூ
உறங்கி விடுகின்றனவாம். பாடும் பெண்களுக்கோ உணர்ச்சி - மிகுதியா
உறக்கம் பிடிக்கவில்லை. அந்தக் 'கிளிகள்' மெய்ம்மறந்து பாடி
கொண்டேயிருக்கிறார்கள்!

இத்தகைய உணர்ச்சிமயமான 'சங்கீதக் கச்சேரி'களை நகரமெங்கு
பார்க்கலாம். "வீடு தோறும் கலையின் விளக்கம்" என்று புதுமை
கவிஞான பாரதி பாடுகிறாரல்லவா? இந்த வாக்கு, இந்தப் பாரதி கனவு
கம்பனுடைய ராம ராஜ்யத்தின் சாயைதான்! இப்படியெல்லாம் கலைகளை
ஒளிரச் செய்யும் பெண்மணிகள் வாழ்க்கையின் விளக்காக விளங்குகிறார்கள்
என்பது குறிப்பு.

அரசியலும் கல்வியும்

இத்தகைய ராஜ்யத்திலே, "வறுமை யில்லாததால் வண்மையு
இல்லை" என்று ஏற்கெனவே சொன்னதையும் ஞாபகப்படுத்தி
கொண்டே, "களவு இல்லாததால் காவலும் இல்லை!" என்கிறான் கவிஞன்

கள்வார் இலாமைப் பொருட்காவலும்
இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும்
இல்லை மாதோ!

[கள்வார்—களவு செய்பவர். இலாமை — இல்லாமையால். பொரு
காவல்—பொருளின் காவல்,]

காவல் இல்லாத இந்தப் புதுமை-அரசின் பயனாக ஏழைகளு
இல்லை, முதலாளிகளும் இல்லை; எனவே கள்வர்களும் இல்லையாம்:

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும்
எய்த லாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும்
இல்லை மாதோ!

[எய்தல் — அடைதல்.]

பெருஞ் செல்வங்களெல்லாம் காற்றைப் போல், கதிரொளி போல்
இயற்கை - அழகுகளைப் போல்; அழகிய நல்லெண்ணங்களைப்போல், இறை
வன் திருவருளைப் போல், எல்லாருக்கும் உரியன! — என்ற கொ
கைக்கு இணங்க, ஆட்சி நடைபெறுகிறதாம்; சமுதாயம் அமைக்கப்பட
டிருக்கிறதாம். எனவே 'இல்லை' என்ற கொடுமையும் இங்கே இல்லை
'சுரண்டிப் பிழைத்தல்' என்ற கொடுமையும் கிடையாது.

"இது என்ன? ராம ராஜ்யம் என்று சொல்லி ஏதோ ஒரு புதிய அ
சியல் - சித்தாந்தத்தை யல்லவா கம்பன் வெளியிடுகிறான்?" என்று அ
சயிக்கிறீர்களல்லவா?

கவிஞனே, "உண்மையான கலைச் செல்வத்தின் உண்மையான விளைவுதான் இது! அந்தக் கல்பகமே இப்படி முளைத்துச் செழித்துக் கனிந்துவிட்டது!" என்கிறான்:

ஏகம் முதல்-கல்வி முளைத்தெழுந்(து),
    எண்ணில் கேள்வி
ஆகும் முதல்திண் பணைபோக்கி,
    அருந்த வத்தின்
சாகம் தழைத்(து)அன்(பு) அரும்பித்தரு
    மம்ம லர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது
    போலும் அன்றே.

[முதல் — வித்து. எண்ணில் — எண்ணிக்கை யில்லாத. முதல் திண் பணை — முதன்மையான வலிமை வாய்ந்த கிளைகள். சாகம் — இலை.]

கல்வி யென்னும் விதையிலிருந்து முளைத்து வளரும் மகா விருட்சமே அயோத்தி என்கிறான். நாலு திசைகளிலும் வளர்ந்து செல்லும் இதன் கிளைகளே எண்ணிறந்த கேள்விகள் அல்லது ஆராய்ச்சிகள். இந்தக் கல்பக விருட்சத்திற்குத் தவம் அல்லது ஒழுக்கமே இலைகள். இத்தவம் அன்பாக அரும்ப வேண்டும். அன்பிலிருந்து இயற்கையாக மலர்ச்சி பெறுகிறது தருமம். தருமத்தின் கனியே போகம் அல்லது இன்ப வாழ்வு!

இந்த வாழ்வு, கல்வி யென்னும் கல்பக விருட்சத்தில் கொம்பிலே கனிந்த கனியாகக் கிடைக்கிறது ராம ராஜ்யவாசிகளுக்கு. இத்தகைய வாழ்வுதானே மனிதனுடைய மதிப்பற்ற செல்வம்? இத்தகைய வாழ்வு உயர்ந்த லட்சியத்திற்காகவும் கலைகளுக்காகவும் தியாகம் செய்யப்படுகிறது.

"இதுவே போகம்; இதுவே பேரின்பம்!" என்ற பூரிப்புடன் வாழ்ந்து வருகிறார்கள் அயோத்தி வாசிகள்.

இந்தக் 'கலை வாழ் நகர'த்திலே அன்பிலிருந்து அரும்பும் சமுதாய தருமம், வாழ்வின் விளக்காகிய பெண்களின் அன்பிலிருந்து விசேஷமாக மலர்ச்சி பெறுகிறது — என்பது கம்பன் ஏற்கெனவே வெளியிட்டிருக்கும் உண்மை.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

13. வெண்ணிலவும் வேண்டுமோ ?

என்ன விசித்திரமான கேள்வி! இப்படியும் ஒரு கம்ப சித்திரம் வர்ண விசித்திரங்களிலே மோகித்துப் போகிறவன் கம்பன் ; நம்மையும் மோகிக்கச் செய்கிறவன். ராம ராஜ்யம் என்ற கம்ப சித்திரமும் ஆரம்பத்திலே வர்ண சித்திரங்களாக நம் கண் முன் வருகிறது. முத்து, சங்கு, செம்பொன், செந்நெல், செந்தேன், பவழம், அன்னம், மயில், குயில், வண்டு, மலர்கள், மணிகள், பெண்மணிகளின் மின்னல்-காட்சிகள். ‘என்ன வர்ணக் கொள்ளை!’ என்று அதிசயிக்கிறோம்.

இந்திரஜால மஹேந்திர ஜாலங்கள்

ராம ராஜதானியோ, பொன்மதிலும் அதற்கு உடுத்தின நீலச் சேலை போன்ற சோலையுமாய், பளிங்குக் கற்களாலும் தங்கத் தகடுகளாலும் பல வகை இரத்தினங்களாலும் அமைந்து ராஜ்ய லட்சுமிக்குச் சூட்டிய கிரீடம் போல நிமிரும் கோபுரமுமாய்க் காட்சி தருகிறது. உள்ளே போய் வீதிகளையும் வீடுகளையும் பார்த்தாலும், வர்ண ஜாலங்கள் காட்டும் இந்திர ஜாலங்களைப் பார்க்கிறோம்.

நகரத்தைப் பார்த்துக் கொண்டே போகும்போது ஒரு பகுதியில், ஏதோ ஒரு மஹேந்திர ஜாலத்தையே பார்ப்பது போல் இருக்கிறது :

மின்என, விளக்கென,
வெயில்-பி ழம்பெனத்
துன்னிய தமனியத்
தொழில்த வழ்த்த,அக்
கன்னிநன் னகர்நிழல்
கதுவ லால்அரோ,
பொன்னுல காய(து)அப்
புலவர் வானமே!

[மின் — மின்னல். பிழம்பு — தொகுதி. துன்னிய — பொரு
திய. தமனியம் — பொன். கன்னி நன்னகர் — பிறால் கவரப்படா
வளத்தையுடைய நகரம்; (இங்கே) அயோத்தி. நிழல் — ஒளி. கது
லால் — பற்றுதலால்; (இங்கே) பிரதிபலித்தலால். புலவர் — (இங்கே
தேவர்கள். புலவர் வானம் — தேவ லோகம்.]

போகும்போதே, "அது மின்னலோ? இது விளக்கா? அங்கே
வெயிலோ?" என்றெல்லாம் பிரமிக்கும்படி, எத்தனையோ அற்புத வேலை



பாடுகள் வீதிகளிலும் வீடு
ளிலும், — மாற்றுயர்ந்த த
கத்தால் இழைத்தவை. இ
படித் 'தொழில் தழைத்த
சௌந்தரிய ஜோதியை
பார்த்ததும், "தேவ லோக
த்தையும் பொன்னுலகம் எ
கிறார்களல்லவா? ஆ
அயோத்திமா நகரின் இந்த
பகுதியிலுள்ள பொன்னொ
பிரதிபலித்துத் தான் பொ
னுலகமாயிருக்க வேண்டு
அந்த விண்ணுலகமும்!
என்று தோன்றுகிறதாம்.

'கன்னி நன்னக'
லவா? பிறால் கவரப்படா
சுதந்திர பூமி: எனவே இ
தகைய சௌந்தரியமு
செழிப்பும்—என்ப
குறிப்பு.

"தேவ விமானங்கள் தா
இப்படி வந்து இறங்கி வி
டனவோ?" என்று பிரமி
க்கும்படி அமைந்திருக்கு
தேஜோ மயமான பொ
மாளிகைகளையும் இரத்தி
கசிதமான மாளிகைகளை
பார்க்கும் போதே, காமு
தேவர்களைப் போல் இ
யாக் கண்ணாகி வி
கிறோம்!

மலை போன்ற சில மா
கைகளில் முத்து மாலை
அருவி விழுவது போ
தொங்கி அசைய, மே
மேகங்கள் போல் கொடி
கூட்டங் கூட்டமாய்ப் ப
கின்றன. பொன்னும் ம

யும் கொழிக்கும் இந்த மாளிகைகளில் கிளிகளோடு மயில்களையும் பார்க்கிறோம். "மயில்கள் வளர்க்கும் மயில்கள்" என்று ஊகிக்கிறோம். சிலம்புகள் ஒலி செய்யக் கேட்டு, அந்த 'மயில்கள்' மாளிகைக்குள்ளே அங்குமிங்கும் நடமாடுவதையும் தெரிந்து கொள்ளுகிறோம்.

இந்த மாட மாளிகைகளுக்கெல்லாம் முன் வாசலில் பூஞ் சோலைகள், மனிதனுக்கு மூச்சுப் பைபோலே. சோலைகள் இல்லாத வாசல்களில் முத்துப் பந்தல்கள். பொன் மண்டபங்கள், அல்லது பூங்கொடிகள் பூத்துப் படர்ந்த மண்டபங்கள். மாளிகைக் குன்றுகளுக்கு அருகே செய்குன்றுகள், இரத்தினக் கற்கள் பதித்த ஸ்தலங்கள்.



வசீகர வெண்ணிறம்

இந்த அற்புத பூமியின் ஒரு முக்கியமான பகுதியில்,

எள்ளரும் கதிரவன்
இளவெயில் குழாம்
வெள்ளியங் கிரிமிசை
விரிந்து போலுமே!

[எள்ளரும் கதிரவன் — இகழ்ச்சியில்லாத சூரியன். இளவெயில் குழாம் — காலை இளங் கதிர்களின் தொகுதி. வெள்ளியங்கிரி — வெள்ளி மலை. மிசை — மேலே.]

"காலை இளஞ்சூரியனுடைய பொன்னிறக் கதிர்கள் விரிந்து கிடக்கின்றனவோ வெள்ளியங்கிரிமீது!" என்று பிரமிக்கிறோம். உண்மையில், மலையுமில்லை; வெள்ளி மலையுமில்லை! வெள்ளிமலை போன்ற மாளிகைகள் தான்; பொன்னால் செய்த ஓடுகள் வேய்ந்திருக்கின்றன.

இப்படியெல்லாம் கம்பன் காட்டும் வர்ண ஜாலங்கள் பல, ராம ராஜதானியிலே. எனினும் இங்கே அதி வசீகரமான நிறம் வெண்ணிறம் தான்; அதி முக்கியமான மாளிகைகள் வெண்ணிற மாளிகைகள் தான்!

இந்த வெள்ளிமலை போன்ற மாளிகைகள், உண்மையில், வெள்ளி மாளிகைகளும் அல்ல: சங்குச் சுண்ணாம்பு அல்லது சிப்பிச் சுண்ணாம்பு பூசிய மாளிகைகள் தான். ஆஹா, வெள்ளிக்குத்தான் இந்த அழகிய வெண்ணிறம் உண்டா?

வெண்ணிலாவிலே பார்க்கவேண்டும். இந்த மாளிகைகளையும் பார்க்க வேண்டும் ; அந்தப் பால் - நிலாவின் முகத்தையும் பார்க்க வேண்டும்: மாறி மாறிப் பார்க்கவேண்டும்.

சந்திரனும் கறுப்பா?

என்ன அதிசயம்! ஏன் அந்தச் சந்திரனுடைய முகம் அப்படிக் கறுத்துப் போய் விட்டது?

கவிஞன் காட்ட நாமும் காண்கிறோம் அந்த அதிசயத்தை :

திங்களும் கரிதென
வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத்
தவள மாளிகை,
வெங்கடுங் கால்பொர
மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடல்
தரங்கம் போலுமே.

[திங்கள் — சந்திரன். தீற்றிய — பூசிய. சங்கம் — சங்கு; (இங்கே) சிப்பி என்றும் சொல்லலாம். சுதை — சுண்ணாம்புச் சாந்து. தவளம் — வெண்ணிறம். வெங்கடுங்கால் — புயல்-காற்று. பொர-மோதி அடிக்க. மேக்கு-மேல். பொங்கு இரும் — பொங்குகிற பெரிய. தரங்கம் — அலை.]

ஒரே கடலாகக் காண்கின்றன இந்த மாளிகைகள் ; புயல் – காற்றிலே பொங்கி யெழும் மலை போன்ற அலைகள் போலத் தோன்றுகின்றன, — விசேஷமாக வெண்ணிலவிலே.

கருங்கடலிலும் நுரைத்து வரும் அலைகள் வெண்மையாகத்தான் தோன்றும் : காற்று வீசி யடிக்கும் போது அந்த வெண்மை அதிகரிக்கக் கேட்பானேன்? நீலக் கடலும் பாற் கடலாகும் நிலவொளியிலே கடுங்காற்று வீசப் பொங்கி யெழும் அலைகளின் வெண்மையைக் கொண்டே ஊகித்துக் கொள்ளலாம், — "இந்தக் கடல் உண்மையாகவே பாற் கடலாக இருந்து விட்டால் இந்தக் காட்சி இன்னும் எவ்வளவு அழகாகவும் அதிசயமாகவும் இருக்கும்!" என்பதை யெல்லாம்.

அவ்வளவு அற்புத வசீகர அழகுக் கடல், அயோத்திமா நகரத்தின் பெரும் பகுதியும். அபூர்வ எளிமையோடு கூடிய அபூர்வ அழகு! — என்று சொல்லவேண்டும் இந்தத் தூய வெண்ணிற அழகை. கலை யழகே இப்படி அபூர்வ எளிமையும் வசீகரமும் வாய்ந்தது தான்! அயோத்தியோ 'கலை வாழ் நகரம்.' கேட்பானேன்?

கலைத் தெய்வம் — சரஸ்வதி — களி நடம் புரியும் அயோத்திமா நகரம், பொதுவாக அத் தேவிக்கு உரிய தூய வெண்ணிறம் வாய்ந்து விளங்குவது எவ்வளவு பொருத்தமானது!

இந்த மாளிகைகளைப் பார்த்ததும் அப்படிக் கரிதாகி விட்ட அந்தச் சந்திரன், இந்த நகரத்தை ஆளும் தசரத சக்கரவர்த்தியின் (ஆட்சிக்கு அறிகுறியான) சந்திரவட்டக் குடையைப் பார்த்ததும், "இந்த ஊருக்கு நான் அவசியமா?" என்று கூட யோசிக்கத் தொடங்கி விடுகிறானும்.

" இருப்பதா, இறப்பதா?"

ஜனங்களும் யோசிக்கிறார்களாம், "இருளைத் தள்ளவும், வெப்பத்தைப் போக்கவும் அந்தச் சந்திரனும் வேணுமா? எங்கள் அரசர்பிரானுடைய கொற்ற வெண் குடையாகிய இந்தச் சந்திரன் போதாதா?" என்று.

இந்த நாட்டுக் கவிராயர்களும்,

> 35 மண்ணிடை உயிர்தொறும்
> வளர்ந்து தேய்வின்றித்
> தண்ணிழல் பரப்பவும்,
> இருளைத் தள்ளவும்,
> அண்ணல்தன் குடைமதி
> அமையும்: ஆதலால்
> விண்ணிடை மதியினை
> மிகைஇ தென்பவே!

38

35

[தண் நிழல்—குளிர்ந்த நிழல். குடைமதி—குடையாகிய சந்திரன். அமையும்—போதும். விண்ணிடை—ஆகாசத்திலுள்ள. மிகை—வேண்டாதது; அதிகப்படியானது.]


என்று பாடுகிறார்களாம். அந்தப் பாட்டும் கம்ப ராமாயணத்திலே சேர்ந்துவிட்டது: கம்பனே சேர்த்துக்கொண்ட 'செருகு கவி'தான்!

தமிழ்க் கவிராயர்களின் சாதாரணக் கற்பனை தான்; சாதாரண அரசர்கள் விஷயத்தில் "அதிகப்படி"தான்; 'அதிகப் பிரசங்கம்'தான்! ஆனால் கம்பீரமாக ராமராஜ்ய வர்ணனை செய்து கொண்டே போகும் கவிச் சக்கரவர்த்தி மெள்ளக் குனிந்து நமது கவிராயர்களின் கற்பனைத் தோட்டத்திலிருந்து இந்த வர்ணனையைத் திருகி எடுத்துத் தன்னுடைய ராம ராஜதானியிலே—தசரத சக்கரவர்த்தியின் வெண் கொற்றக் குடையிலேயே—சொருகி விடுகிறான்!—"ஆஹா, இங்கே அல்லவா பொருந்தியிருக்கிறது?" என்று நாமெல்லாம் வியக்கும்படி.

மலர்களுக்கும் இலைகளுக்கும் இடையே, "உலாவும் பூங்கொடியோ?" என்று பிரமிக்கும்படி வந்த ஓர் அழகு-ராணி லாகவமாய்க் குனிந்து ஏதோ ஒரு சாதாரண மலரையோ, துளசி மருக்கொழுந்து போன்ற இலையையோ தன் தளிர்க் கை நீட்டி மலர் போன்ற விரல்களால் திருகிக் கொய்து கூந்தலில் சொருகிக் கொள்ளும் பாவனைதான் கம்பனுடைய இந்த வர்ணனையின் தோரணையும்.

சந்திரனுக்குப் பிரசினை பிரசினைதான்; நெருக்கடி நெருக்கடிதான்: —ஷேக்ஸ்பியர்-ஹாம்லெட் துரையின் "இருப்பதா, இறப்பதா?" என்ற அந்தப் பிரசினைதான்! இருளை நீக்கவும் வெப்பத்தைப் போக்கவும் இனிமேல் சந்திரனும் வேண்டுமா? பகையாகிய இருளையும் அறியாமை-இருளையும் கூட ஓட்டி விடுகிறதே இந்த ராஜ்யத்திலே, கொற்ற வெண்குடையின் வெண்ணிலவு! பயமாகிய வெப்பத்தையும் பயமுறுத்தி விடுகிறதே!

ஆம், இந்த ராஜ்யவாசிகளின் கல்விச் சிறப்பிற்கும் கள்ளங் கவடற்ற உள்ளத்திற்கும் அடையாளமான அந்த மாளிகைகளின் வெண்ணிறமே போதும், முத்து-நிலாவும் முகம் கருகி, "நானும் வேணுமா?" என்று யோசித்துப் பார்ப்பதற்கு!



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

14. உயிர்கள் பல; உடம்பு ஒன்றே!

இப்படியும் ஒரு கம்ப சூத்திரமோ? "உடம்புகள் பல; உயிர் ஒன்றே" என்றுதானே அத்வைதிகள் சொல்லுகிறார்கள்? இதைத் தானே "ஒதிய உடம்பு தோறும் உயிரென" என்று கம்பன் கூட ஸரயு வர்ணனையில் உபமானமாக உபயோகித்திருக்கிறான்?


ஆற்றுப் படலமென்றும், நாட்டுப் படலமென்றும், நகரப்படல மென்றும் கம்பன் பாடப் பாட, ஏதோ ஒரு எதிர்கால உலகம் நம் மனக் கண் முன் ஓடி வருவது போல வருகிறது ராம ராஜ்யம். "வேறு எப்படித் தான் இருக்க முடியும்? புருஷோத்தமன் அல்லவா ராமன்? லட்சிய புருஷன் அல்லவா?" என்று நாம் எண்ணமிடும் போதே, "ராமன் ஆளவில்லை இந்த ராம ராஜ்யத்தை. ராமன்தான் இன்னும் பிறக்கவே யில்லையே! தந்தையாகிய தசரதனல்லவா சக்கரவர்த்தியாக இருக்கிறான்?" என்று ஞாபகப்படுத்துகிறான் கவிஞன்.

தர்ம மூர்த்தியைத் தந்த தர்ம மூர்த்தி

தசரத சக்கரவர்த்தியையும் ராமனுடைய தந்தை என்று தான் அறிமுகப்படுத்துகிறான்:

இம்மாண் கதைக்(கு)ஓர்
இறையாய இராமன்
என்னும்
மொய்ம்மாண் கழலோன்
தருநல்லற மூர்த்தி
அன்னான்.

[மாண்—மாட்சிமைப்பட்ட. ஓர் இறை—ஒப்பற்ற தலைவன். ஆய—ஆகிய. மொய்—வலிமை; (இங்கே) வலிய. கழலோன்—வீரக் கழல்



அணிந்தவன் ; (இங்கே) வீர ராமன். மூர்த்தி அன்னான்—வடிவத்தை ஒத்தவன்.]

கதா நாயகனாகிய வீர மூர்த்தியைத் தந்த தர்ம மூர்த்தி—என்றுதான் கட்டியம் பாடி அறிமுகப்படுத்துகிறான் புவிச் சக்கரவர்த்தியைக் கவிச் சக்கரவர்த்தி. ராமனுடைய வீரத்தை "மாட்சிமைப்பட்ட வீரம்" என்கிறான். தர்மத்தின் ஆட்சியையும் மாட்சியையும் உலகத்திலே நிலை நிறுத்தப் பிறந்த வீரம் அல்லவா?

இந்தக் கருத்தை உள்ளிட்டு,


அறத்தின் மூர்த்திவந்(து)
அவதரித் தான்என்ப(து)
அல்லால், —

வேறு என்ன சொல்ல முடியும் ராமனைக் குறித்து? — என்று பின் ஒரு சமயம் தசரதனையே கேட்கிறான், வசிஷ்ட முனிவனும். "நீ தந்த கழலோன் (வீரன்)" என்றும் குறிப்பிடுகிறான். "உன்னுடைய முன்னோர்களான சக்கரவர்த்திகளும் எவ்வளவோ பெருமைக்கு உரிமையுள்ளவர்கள்தான்: ஆனால் அவர்களில்,

யாவரே இராமனைப்
பெற்றார்?"

என்றும் கேட்டு விடுகிறான்.

ராமனைப் பெற்ற பெருமை தசரதனுக்குத் தானே? எனவே, தர்ம மூர்த்தியைத் தந்த தர்ம மூர்த்தி — என்கிறான். "கங்கையின் உற்பத்தி" "காவேரியின் உற்பத்தி" என்றெல்லாம் கௌரவிப்பதில்லையா? இந்தப் புண்ணிய நதிகளின் பெருமை முழுவதும் அந்த உற்பத்தி ஸ்தானங்களிலே காணப்படுகிறதா?



இப்படி ராமன் தந்தையென்ற தசரதனைக் கௌரவிக்கும் கவிஞன், இங்கே இந்தச் சக்கரவர்த்தியின் முன்னோரைக் குறித்துப் பேசாததில் அதிசயம் இல்லை. மனு இட்சுவாகு மாந்தாதா சிபி முதலான அந்தப் பெரிய பெரிய சக்கரவர்த்திகளின் வம்சப் பிரவா

கத்தோடு வந்த பெருமையைக் காட்டிலும் எவ்வளவோ மேலான நல்வ
சந்ததியாக ராமனைப் பெற்றத் தசரதன் அடையப் போகும் பெருமை,
அடையப் போகும் பாக்கியம்?

அரசன் ஆட்சி செய்யவில்லை!

எனவே, இந்த 'அரசியல் - படல'த்திலே 'குலமுறை'யாக வ
பெருமை பேசப்பட வில்லை. அந்தப் பிரமாண்டமான அரண்மனை கூ
வர்ணிக்கப்பட வில்லை. அந்தக் கொலு மண்டபமும் — ஏன்? அந்
சிங்காசனம் கூட — வர்ணிக்கப்பட வில்லை. ராஜரீக ஆடம்பரங்களாவ
அதிகார படாடோபங்களாவது பிரஸ்தாபிக்கப் படவுமில்லை.

யார் யார், சக்கரவர்த்தியின் சன்னிதியிலே, எப்படி எப்படிப் ப
செய்து கொண்டிருந்தார்கள்? — என்பதொன்றும் சொல்லப்பட வில்
ஆனால் ஆட்சி முறைக்கு இன்றியமையாத அறிவும், அருள் முதலா
குணங்களும் தசரத சன்னிதியிலே, "நான் என்ன பணி செய்ய வேணும்
நான் என்ன செய்ய வேணும்?" என்று பணி கேட்டு நிற்கின்றனவாம்,
கம்பன் முன் கவிதை பணிகேட்டு நிற்பது போலே.

ராஜரீக ஆடம்பர மாட்சிகளிலே ராஜதர்மம் மறைந்து போகிறத
மறந்தும் போகிறது ராஜாக்களுக்கும் ராஜதந்திரிகளுக்கும். தசரதே
ராஜ குணங்களெல்லாம் தனக்குப் பணி செய்யத் தான் ஜனங்களுக்கு
பணி செய்து வருகிறான். தசரத மன்னன் ஆட்சி செய்யவில்லை
பணி செய்கிறான்: இதுதான் இந்த மன்னன் மாட்சி! — என்கிற
கவிஞன்.

இந்த மாட்சியைப் பாருங்கள்; அன்புப் பணியைப் பாருங்கள்:

தாய்ஒக்கும் அன்பின்;
தவம்ஒக்கும் நலம்ப
யப்பின்;
சேய்ஒக்கும் முன்நின்(று)
ஒருசெல்கதி உய்க்கும்
நீரால்;
நோய்ஒக்கும் என்னின்
மருந்(து)ஒக்கும்; நுணங்கு
கேள்வி
ஆயப் புகுங்கால்
அறி(வு)ஒக்கும் எவர்க்கும்
அன்னான்:

[பயப்பின் — அளிப்பதில். சேய் — மகன். உய்க்கும் — செ
தும். நீரால் — நீர்மையினால்; தன்மையினால். நுணங்கு — நுட்பமா
ஆய — ஆராய. புகுங்கால் — புகுமிடத்து.]

அன்பின் சிகரமல்லவா தாயன்பு? குழந்தைகளுக்குத் தாய் எப்ப
யெல்லாம் பணி செய்கிறாள்! எப்படிப்பட்ட தியாகங்களையும் அனா
மாய்ச் செய்து விடுகிறாளல்லவா? அப்படியெல்லாம் அன்புப் பணி
செய்கிறானாம் தசரதனும் தன் மக்களுக்கு.

இதனால் தசரதன் ஸ்ரீமான் பொது ஜனத்தைக் குழந்தையாகவோ, மைனராகவோ மதித்து விட்டான்!—என்று எண்ணி விடலாகாது. அப்படி எண்ணலாகாது என்பதற்கு ஓர் எச்சரிக்கை போல் அமைந்திருக்கிறது—"மன்னன், மகன் போல் இருக்கிறான் ஜனங்களுக்கு" என்று காட்டும் செய்யுட் பகுதி. ஏன்? "அவர்களைச் செல்லுவதற்கு உரிய ...வல கதியில் செலுத்திக் கொண்டிருப்பதால்!" என்கிறான் கவிஞன். இங்கே அரசன் ஜனங்களுக்குத் தந்தையாக இருக்கிறான் என்று சொல்...ததும் கவனிக்கத் தக்கது. இந்த அரசாங்கம் "மாதா பிதா - பரிபாலனம்" அன்று என்பது தெளிவு.

ஆனால் தாயாகவும் சேயாகவும் அமைந்து பணி செய்யும் அரசாங்கம், ஜனங்கள் செய்த தவமாகவும் அமைந்து அவர்களுக்கு மேலும் மேலும் ...ம் செய்து கொண்டிருக்கிறதாம். ஆம்; ஜனங்களுக்கே நலம் செய்யும் அரசாங்கம்—மந்திரத்தாலோ, தந்திரத்தாலோ, வாய் வீச்சினாலோ வந்து ...ழும் மாங்கனி அன்று; பொது ஜனம் செய்த தவப் பயன் தான்; தவக் கனிதான்!

இத்தகைய அரசாங்கம், "குற்றங்களைக் கண்டிக்க வேண்டும்; ஆனால் குற்றவாளிகளைத் திருத்த வேண்டியது தான்: குற்றவாளி நோயாளி ...போலே!" என்ற உண்மையையும் உணர்ந்திருக்கிறதாம்.

இந்த அரசாங்கத்திலே அரசன் அறிவுக்குச் சமானமாக விளங்குகிறான்... ...ம், ஜனங்கள் எல்லாருக்கும்—யாதொரு பட்சபாதமும் இல்லாமலே. இது

ஒரு முக்கிய காரணம், கோசல நாடு அறிவுப் பெருங்கோயிலாகவும் அ
பெருங் கோயிலாகவும் தழைத்து ஓங்குவதற்கு.

அரசியல் - சூத்திரம்

இந்த ஆட்சி முறையின் சிறப்பையெல்லாம் ஓரே சூத்திரத் அடக்கிக் கூறுவதுபோல் கவிஞன் தசரத மன்னனை,

உயிரெலாம் உறைவதோர்
உடம்பும் ஆயினான்

[உறைவது—வசிப்பது ; தங்குவது.]

என்று வர்ணித்து விடுகிறான்.

“மன்னுயி ரெல்லாம் தன்னுயிர் போலப் பாதுகாக்கிறான் மன்ன என்றெல்லாம் சொல்லுகிறார்களே,—அது போதாதாம், போதவே பே தாம், தசரதனது ஆட்சிமுறையின் மாட்சியை உள்ளபடி உணர்த்துவத மன்னுயிரையே—அதாவது, நிலை பெற்ற உயிர்க் குலத்தையே—தன் ராகப் பாதுகாத்து வருகிறானும் தசரதன். இவனுக்கு மன்னுயிரே உய அம் மன்னுயிரைத் தாங்கும் உடம்பாகவே தன்னை மதிக்கிறான் !

மன்னனும் குடிகளும் உடம்பும் உயிரும் போல் இருக்க வேண் என்பது நமது தமிழ் நாட்டிலே ஒரு பழைய கொள்கைதான்.

மன்னன் உயிர்த்தே,
மலர்தலை உலகம்

[உயிர்த்தே—உயிராக உடையது. மலர்தலை—விரிந்த இ உடைய.]

என்பது சங்கப் புலவர் வாக்கு. கம்பனுக்குச் சுமார் ஆயிரம் வருட ளுக்கு முன்பே வழங்கி வந்த அரசியல்-கொள்கை இது.

“மன்னனை உயிராக உடையது உலகம்” என்ற இந்தக் கொள் கள்ளங்கவடற்ற பழைய காலங்களில் நல்ல கொள்கையாகத்தான் இ தது. ஆனால் பிற்காலத்திலே அரசர்கள், “உயிராகிய எங்களைத் தா வதே உடம்பாகிய ஜனசமூகத்தின் கடமை” என்று எண்ணியிருக்க உடம்பின் ஒரு பகுதியை அறுத்துச் சுட்டாவது ரண வைத்தியர்கள் ரைக் காப்பாற்றுவது போல், அரசாங்கத்தையும் காப்பாற்ற வேண்டு என்று கருதவும் இக் கொள்கை இடம் தரக்கூடும். இது கொடுங்கோ களுக்குக் கொண்டாட்டம் அல்லவா ?

எனவே, “அரசாங்கம் உயிர் ; ஜன சமூகம் உடம்பு” எ பழைய கொள்கையைக் கம்பன் லேசாக மாற்றி விடுகிறான். “ஜன கமே உயிர் ; அரசாங்கம் உடம்பு” என்று இப்படி மாற்றிக் குடிக நலத்தையே பிரதானமாக்கிக் காட்டுகிறான்,— “உயிரெலாம் உறைவ உடம்பு” என்ற கம்ப சூத்திரத்திலே.

“உடம்புகளி லெல்லாம் உறைவது ஓர் உயிர்”— அதாவது, புகள் பல ; உயிர் ஒன்றே — என்பது அத்வைத வேதாந்தம். உயி பல ; உடம்பு ஒன்றே — என்பது கம்பனுடைய அரசியல்-வேதாந்த

சக்கரவர்த்தித் திருமகன் / சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

15. ஒரே கவலை; ஒரே மருந்து

ஒரு குடியானவன்; ஒரே வயல்; ஒரே கவலை. அந்த ஒரே வயல் தான் முழு ஆஸ்தியும். குழந்தை குட்டிக்காரனுகிய அந்த ஏழை இந்த வருமானத்தைக் கொண்டு தான் காலம் தள்ள வேண்டும். அப்படியானால் அந்த ஏழைக் குடியானவன் இந்த நிலத்தை எவ்வளவு ஜாக்கிரதையாக உழுது பண்படுத்துவான்; பயிரிடுவான்; களை பறிப்பான்! எவ்வளவு கவனமாகத் தண்ணீர் பாய்ச்சுவான்; எவ்வளவு பொறுமையோடு வேலி கட்டுக் காத்துக் கிடப்பான்!

தரித்திரமே இல்லாத தசரத ராஜ்யத்திலே இப்படி ஒரு குடியானவன் இருக்க முடியுமா? தசரத சக்ரவர்த்திதான் அந்த நிலையில் இருக்கிறு னும். அவ்வளவு கவனமாக இராஜ்யம் முழுவதையும் காவல் செய்து வரு கிறனும். ஆம்; அவ்வளவு பொறுமையாக, அவ்வளவு ஜாக்கிரதையாக.

"அப்படித் தானே அரசாட்சி செய்து கொண்டிருக்கிறன்? பாருங்கள்!" என்று அதிசயமாக நம் கண் எதிரே அந்த ஆட்சி நிகழ்வது போலக் காட்டி விடுகிறன் கவிஞன்:

38. வையகம் முழுவதும்,
வறிஞன் ஓம்பும்ஓர்
செய்யெனக் காத்(து),இனிது
அரசு செய்கின்றான்!

[வையகம்—உலகம்; (இங்கே) இராஜ்யம். வறிஞன்—தரித்திரன். ஓம்பும்—காக்கும். செய்—வயல்.]

"அரசு செய்கின்றான்" என்கிறன், 'சரித்திர நிகழ் காலம்' (Historic Present) என்று நாம் இங்கிலீஷில் சொல்லுகிறோமே அந்த முறையிலே. இப்படிச் சொல்லிக் காட்டும்போது, "உயிரெலாம் உறைவ தோர் உடம்பு" என்று பாராட்டப் பெறும் அந்த ஆட்சியை "ராம ராஜ் யம்" என்ற லட்சிய பூமியின் வித்தாகப் பார்த்து விடுகிறோம்.



"ஒரே வயல்போலக் காத்து..." என்று கூறுவதால், இரா
ஒருமைக்கும் ஒற்றுமைக்கும் பழுதில்லாமல் அரசாட்சி நடைபெறுகி
என்பதும் குறிப்பு. "ஓர் செய்யெனக் காத்து இனிது அரசு செய்
றான்"—எவ்வளவோ சிரமமான காரியம் தான்; எனினும் சிறிதும் சி
தோன்றவில்லையாம் சக்ரவர்த்திக்கு. அவ்வளவு அன்பு, அவ்வளவு உத்ஸா
நாட்டு மக்களுக்குத் தொண்டு பூண்டு உழைப்பதிலே.

வீர மன்னன்தான்; போரிலும் உத்ஸாகம் காட்டியவன்தா
"எங்கே? அம்புகளை எடு; எய்து பார்!" என்று வீர வாதமும்
முழக்கமும் செய்து வலுச் சண்டைக்கு வந்த பகைவர்களை வைத்
பார்க்கும் அஜாக்கிரதையும் கிடையாது, இந்த மன்னனிடம். அவ
அன்பர்களாக வேண்டும்: அதாவது, பகை ஒழிய வேண்டும்; இ
விட்டால் பகைவர்கள் ஒழிந்து போக வேண்டியது தான்! இந்தக் க
நிகழும் காலத்திலோ, தசரதனுக்குப் பகைவர்களே இல்லை.

என்ன தினவு! என்ன கவலை!

இந்த நிலையைக் கொஞ்சம் ஹாஸ்யமாகவே காட்டுகிறான் கவி

எய்யென எழுபகை
எங்கும் இன்மையால்,
மொய்பொரு தினவுறு
முழவுத் தோளினன்.



எய்யென — (அம்புகளை) 'எய்' என்று சொல்லிக்கொண்டே. எழுகிற; தன்மேல் வருகிற. மொய் — போர். மொய் பொரு — போர் செய்வதற்கு உண்டாகும் தினவு. முழவு — மத்தளம்.]

த்தளம் போலத் திரண்டு உருண்ட அந்த வீரத் தோள்கள், யுத்த அப்பியாசம் பெறாமல், தினவெடுத் திருக்கின்றனவாம். "இந்த றைதான் நமது சக்ரவர்த்திக்கு!" என்று நிந்தா ஸ்துதியாகக் டுகிறான், "பகையின்மை; போரின்மை" என்ற அந்தத் தனிப் பாக்கியத்தை. பொதுஜன கைங்கரியம் என்ற வேறொரு அப்பி தைத் தோளுக்குக் கொடுத்துத்தான் இந்தத் தினவைப் போக்கிக் வேண்டியிருக்கிறது இப்போது!

அன்போடு ஒத்து வாழத் தெரியாத பகைவர்களைத் தசரதன் வா
கொன்றொழித்தான் என்றே கம்பன் கூறுகிறான். "வாளால் காய்
கடந்தான் பகை வேலை"—அதாவது, பகையாகிய சமுத்திரத்தை வா
ஒழித்துக் கடந்துதான் 'பகையின்மை' என்ற இந்தக் கரையை அ
திருக்கிறான் — என்று வர்ணிக்கிறான் ராமன் தந்தையை நமது
ராஜ்ய ஆஸ்தான கவி. போர் ஒழிந்ததும், கொலைக் கருவிகள் எல்
கொல்லன் உலைக்களம் சேர்ந்து உழவிற்கு உரிய கருவிகள் ஆகிவிட்ட
என்று ஊகிக்கலாம். யுத்த கால உத்ஸாகமும் சமாதான காலத்
குறைந்து போகாமல் அரசாட்சியைப் பொதுஜன ஸேவையாக நட
வதில் அப்படியே ஈடுபட்டது — என்றும் ஊகஞ் செய்யலாம்.

தசரதனுக்கு எப்போதுமே பொது ஜனங்களைப்பற்றிய க
தான்; அவர்களுக்குப் பணி செய்ய வேண்டும் என்ற இந்த ஒரே க
தான். பகைவர்களோடு போர் செய்யும் போதும் இதே கவலை த
பகை ஒழிந்து, போரும் ஒழிந்து போன காலத்திலும் இதே கவலை
வயது அதிகரிக்க அதிகரிக்க, இந்தக் கவலையும் அதிகரித்து வந்தது.

இந்தச் சக்ரவர்த்திக்குப் பிள்ளை இல்லை. ஆனால் "எனக்குப் பி
யில்லையே!" என்று கூட இவன் குறைப்பட வில்லையாம். "எனக்குப்
இந்த ஜனங்களுக்குப் பணி செய்யச் சந்ததி யில்லையே!" என்று
கவலைப்பட்டானாம்.

இந்தக் கவலையைத் தசரதன் தன் குல குருவும் முதல் மந்திரியும
வசிஷ்ட முனிவனோடு பங்கிட்டுக் கொள்ளுகிறான். சாமானியர்கள்
உண்மையான நண்பர்களாயிருந்தால் நம்முடைய துயரங்களையும்
களையும் பகிர்ந்து கொள்ளுகிறார்களே; நாமும் ஹிருதயத்தோடு ஹிரு
பேசுவதுபோல் அவர்களோடு பேசி ஆறுதல் அடைகிறோமே! தசர
வசிஷ்ட முனிவனை வணங்கித் துதித்து அவனோடு உரையாடி ஆ
பெற விரும்பியது எவ்வளவு பொருத்தமானது!

அந்த வணக்கமும் தோத்திரமுமே ஓரளவு ஆறுதல் அளித்தி
வேண்டும்.

39 தாயரும் தந்தையும்,
தவமும், அன்பினால்
மேயவான் கடவுளும்,
பிறவும், வேறும்நீ!

[தாயர்—தாய்மார். மேய—மேவிய; விரும்பி அடைகிற.]

என்று துதித்துப் புகழ்ந்து இத்தகைய முனிவர் பெருமானு
அருளினால் பகையை ஒடுக்கி இராஜ்யத்தைத் தான் இனிமையாகப்
காத்து வருவதாய்ச் சொல்லுகிறான்.

இப்படிச் சொல்லி விட்டு,

40 பிறிதொரு குறையிலை;
எற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர்
மறுக்கம் உண்டரோ!

[பிறிதொரு — வேறொரு. இலை—இல்லை. எற்பின் — என் பின். வையகம் — இராஜ்யம். மறுகுறும் — கலங்கி விடும். மறுக்கம்—மனக் கலக்கம்.]

என்று விண்ணப்பம் செய்து கொள்ளுகிறான், தன் மனக் குறையை.

"உன்னுடைய அருளால் ஆட்சி செய்யும் எனக்கு என்ன குறை இருக்க முடியும்? வேறொரு குறையும் இல்லை: எனக்குப் பின் ஜனங்களுக்குத் தொண்டு பூண்டு உழைக்க ஒரு காவலன் வேணுமே! அதற்காகச் சந்ததி வேணும்" என்றுதான் சொல்லுகிறான். சந்தானத்தைப் பற்றி யோசிக்கும் போதும் தசரதனுக்குச் சுயநல உணர்ச்சி இல்லை; இராஜ்யத்தைப் பற்றிய கவலை தான்!

தியானமா? தரிசனமா?

வசிஷ்டன் உடனே பதில் சொல்லவில்லை. தசரதனுடைய பொன்னான உள்ளம் தெரிந்ததும் முனிவனுடைய புனித உள்ளம் கால வெள்ளத்தை எதிர்த்துப் பின்னோக்கி ஓடுகிறது. அப்போது ஒரு கனவு — இல்லை, ஒரு காட்சி.

41 அலைகடல் நடுவண்,ஓர்
அனந்தன் மீமிசை,
மலையென விழிதுயில்
வளரும் மாமுகில்,
கொலைதொழில் அரக்கர்தம்
கொடுமை தீர்ப்பன்என்(று),
உலைவுறும் அமரருக்(கு)
உரைத்த வாய்மையை —

[நடுவண் — நடுவிலே. அனந்தன் — ஆதிசேஷன். மீமிசை — மேலே. முகில் — மேகம். உலைவுறும் — வருத்தம் மிக்க. அமரர் — தேவர். வாய்மை — வாக்குறுதி.]

— ஏதோ ஒரு அசரீரி சிரவணம் போலவும் கேட்டு விடுகிறான் வசிஷ்டன். அந்தக் காட்சியும் இன்றே, இப்போதே, நடை பெறுவதுபோலத் தோன்றுகிறது.

தியான வாசலைத் திறந்துகொண்டு பார்த்து விடுகிறான் முனிவன், அலைகடல் நடுவிலே மலைபோலக் கண்வளரும் ஸர்ப்ப சயன மூர்த்தியை. தேவர்கள் எங்கேயோ தொலை தூரத்திலிருந்து பிரார்த்திப்பதும் தெரிகிறது: அந்த மூர்த்தி, அபயதானம் செய்யும் வாக்குறுதிகூடக் காதில் விழுகிறதே! அந்த வாக்குறுதி தேவர்களுடைய கவலையோடு தசரதன் கவலையையும் போக்கிவிடும் என்று எண்ணத் தொடங்குகிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

உலகத்தை ரட்சிப்பது தானே பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் கருணைக் கடலின் தொழில்? அரக்கர் தொழிலோ நேர்மாறானது; கொலையையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்களாம்.

ராட்சஸ சக்திகள் இந்த உலகத்திலே நிகழ்த்தும் அதிக்கிரம ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் பார்ப்பதற்குக் கண் இல்லையா உலக ரட்சகனுக்கு? பள்ளி கொண்ட பெருமாள் தானே! — என்று நினைத்து விடலாமல்லவா? ஆனால் அந்தத் துயில் அறிதுயில்தானாம். இங்கே நடப்பதை யெல்லாம் அறிந்து கொண்டுதான் உறங்குகிறானாம். அப்படி விழித்துக் கொண்டே தூங்கும் அந்த மாயப் பேர்வழியையும் வஞ்சிக்க முடியுமா? அந்த யோக நித்திரையிலும் இந்த லோகத்தின் யோக க்ஷேமத்தை விசாரித்துக் கொண்டுதான் இருக்கிறானாம், — எங்கும் செவிகளாக; எங்கும் கண்களாக. ஆம்: அந்த யோகத்தின் நோக்கமே லோகத்தின் க்ஷேமம் தானே? — லோக ரட்சை தானே?

பொன்மலையும் நீல மேகமும்

அத்தகைய ரட்சக மூர்த்தியின் நெஞ்சிலே படுகின்றன தேவர்களுடைய துயரங்களும் சாதுக்களுடைய கஷ்ட நஷ்டங்களும். அவர்களுடைய பிரார்த்தனைகள் அந்தச் செவிகளில் விழுகின்றன. அந்த யோக நித்திரையையும் உதறித் தள்ளி விட்டு, அபயமளிப்பதற்காகப் பறந்து வருகிறானாம் கருடன் மேல். அந்தத் தோற்றம் எவ்வளவு வசீகரமாய் வருணிக்கப்படுகிறது, பாருங்கள்:

> கருமுகில் தாமரைக்
> காடு பூத்து, நீ(டு)
> இருசுடர் இருபுறத்(து)
> எந்தி, ஏடவிழ்

திருவொடும் பொலிய,ஓர்
செம்பொற் குன்றின்மேல்
வருவ்போல், கலுழன்மேல்
வந்து தோன்றினன்.

[முகில் — மேகம். நீடு — நீண்ட தூரம் ஒளி செய்கிற. இரு சுடர்
இரண்டு சுடர்களான சூரிய சந்திரர்கள். ஏடவிழ் (ஏடு+அவிழ்) இ
விரிந்த (தாமரைப் பூவிலுள்ள). திரு — லட்சுமி. கலுழன் — கருடன்.

வெய்யிலால் தவித்துக் கொண்டிருக்கும் பயிர்களும் உயிர்களும் ம
முகம் காண்பது போலக் காண்கிறார்களாம் தேவர்களும் பகவானை. மு

முதல் ஆகாசத்தில் அ
தூரத்திலே ஒரு
மேகம். வரவரப் பெரி
கிறது. பிரமாண்டமா
அந்த நீல மேகத்தினி
யே செந்தாமரைப்
கள் காடாகப் பூத்
கிடப்பது போல்
தோற்றம். மே
த்தின் இரண்டு
கங்களிலும்
ண்டு சுடர்கள்.
காலத்திலே எ
எதிராகப் பெ
கின்றன, சந்



ாரியர்கள். ஆம்: அப்படிச் சுடர்கின்றனவாம் திவ்ய அவயவங்களும் ங்கு சக்ரங்களும்.

அந்த நீல ஜோதி, செந்தாமரைகளின் அழகுச் செல்வமாகிய மகா லட்சுமியோடு வருகிறானும் பொற் குன்றின்மேல் வருவதுபோல் கருடா ரூடனுகி.

திருமால் தேவர்களுக்கு அபயம் அளித்து, அயோத்தியில் தசரத புத்திரனுக வருவோம் என்று வாக்களித்ததாகிய அந்தக் காலம் — அந்தச் சந்தர்ப்பம் — அந்தக் காட்சி, இப்போது அப்படியே உதயமாகிவிட்டது வசிஷ்ட முனிவன் இதயத்திலே. உடனே "தசரதன் குறை தீரத் தேவர் கள் குறை தீரும்" என்று முடிவுகட்டும் வசிஷ்டன், சக்ரவர்த்தியைப் புத் திரகாமேஷ்டி யாகம் செய்ய வேண்டுமென்று தூண்டுகிறான்.

உலகம் தெரியாத உலக சிரேஷ்டன்

அதற்குத் தசரதன், "அந்த யாகத்தின் பொருட்டு அடியேன் செய் யும் பணியை நியமிக்க வேணும்" என்று பிரார்த்திக்க வசிஷ்டன், 'தெய்வ மும் மகாத்மாக்கள் மூலமாகவே கருணை பொழிகிற'தென்று அரசனுக்குக் கலைக்கோட்டு முனிவன் கதையைச் சொல்லுகிறான்.

கலைகளை யெல்லாம் கரைத்துக் குடித்த அந்த முனிவனுக்கு இந்த உலகத்தின் திருகல் - முறுகலான வழிதான் தெரியாத கலை!

திருகலை உடைய இந்தச்
செகத்துளோர் தன்மை தேரா—

[திருகல்—மனக் கோணல். செகத்துளோர் — உலகத்தவர். தேரா — அறியாதவனுகி.]

அந்த முனிவன் காட்டிலேயே ஒதுங்கித் தவம்செய்து கொண்டிருக் கிறானும்.

"அப்பேர்ப்பட்ட பரம சாது வந்து உனக்காகப் புத்திர காமேஷ்டி யாகத்தைச் செய்து முடித்தால், புத்திர சம்பத்து நிச்சயம்" என்கிறான் வசிஷ்டன்:

"பாந்தளின் மகுட கோடி
பரித்தபார் அதனின் வைகும்
மாந்தரை விலங்கென்(று) உன்னும்
மனத்தன்,மா தவத்தன், எண்ணில்
பூந்தவி(சு) உகந்து ளோனும்,
புராரியும் புகழ்தற்(கு) ஒத்த
சாந்தனல் வேள்வி முற்றின்,
தனயர்கள் உளராம்" என்ருன்.

[பாந்தள் — பாம்பு: (இங்கே) ஆதிசேஷன். மகுடகோடி — மகுட வரிசை. பரித்த — சுமந்த. பார் அதனின் — பூமியிலே, வைகும் —

தக்கும். விலங்கு — மிருகம். உன்னும் — நினைக்கிற. மா — பெ
பூந்தவிசு — தாமரைப் பூவாகிய ஆசனம். உகந்துளோன் — விரும்
வன்; (இங்கே) பிரமதேவன். புராரி — திரிபுர தகனம் செய்த சிவபெ
மான். வேள்வி — யாகம்.]

ஆதிசேஷன் தன்னுடைய ஆயிரம் மணி மகுட வரிசையாலும் சும
கொண்டிருக்கிறான் என்று புராணம் கற்பனை செய்கிறதே — இத்தகை
அருமையான பூமிக்குச் சுமையாக இருக்கும் கோணல்-புத்தியுள்ள மனி
களும் இருக்கிறார்களே! இவர்களை யெல்லாம் மிருகங்கள் என்று த
நினைத்துக் கொண்டிருக்கிறானாம் கலைக் கோட்டு முனிவன்.

இவர்கள் எவ்வளவு படாடோபமாக ஆடையாபரணங்களைச் சும
கொண்டு புறப்பட்டாலும் சரிதான். "உடை தரித்த மிருகங்கள்; நல
பைத்தியம் கொண்ட மிருகங்கள்!" என்றுதான் அந்த முனிவன் க
வானாம். "இந்த மிருகங்களைக் காட்டிலும் காட்டு மிருகங்கள் தேவலை
என்றுதான் காட்டிலே தவம் செய்து கொண்டிருந்தானாம்.

சாந்த குண பூஷணனாகிய அவனுக்கு வேறு உடைமைகளும் வே
டுமா? அந்தச் சாந்தகுணம் பிரமனாலும் சிவ பெருமானாலும் கூ
புகழத்தக்க பெருங் குணம் — என்கிறான் வசிஷ்டன்.

இது கேட்ட சக்ரவர்த்தி, "அந்த முனிவன் இப்போது எந்தக் க
டில் இருக்கிறானோ? நான் எப்படி, எங்கே போய் அவனை அழைத்து
வது?" என்று அறிய விரும்புகிறான். அதற்கு விடையாக வசிஷ்ட
ரோமபாதன் என்ற அங்க தேசத்து மன்னனைக் குறித்துப் பிரஸ்தா
கிறான்.

அங்க தேசத்திலே மழையில்லாமல் கொடிய பஞ்சம் ஏற்பட்ட
"என்ன செய்யலாம்?" என்று அரசன் முனி சிரேஷ்டர்களோடு ஆ
சனை செய்தானாம். அவர்களும், அந்த நாட்டிற்குக் கலைக்கோட்டு முனி
அழைத்து வந்தால் வானம் கருணை புரியுமென்று சொன்னார்கள்
"அந்த முனிவனோ மனிதர்களையே மிருகங்களாக மதிப்பவனாத
நாட்டுக்கு எப்படி வருவான்? எந்த உபாயத்தால் அவனை வரவழை
முடியும்?" என்று ரோமபாதன் சிந்திக்கத் தொடங்கினான். அப்பே
சில பெண்கள் அந்த அரசனை வணங்கி, "நாங்கள் போய் அழை
வருகிறோம்" என்று சொல்லிப் புறப்பட்டார்களாம்.

அந்தப் பெண்கள் காட்டுக்குப் போய் முனிவர் வேஷம் பூண்டு க
கோட்டு முனிவனைச் சந்தித்து வணங்கித் தங்கள் ஆச்ரமத்திற்கு
வேணுமென்று அழைத்தார்களாம். அவன் நம்பிப் புறப்பட்டதும்,
கள் அவனை அங்க தேசத்திற்குப் போகும் வழியிலே அழைத்துக் கொ
வந்து விட்டார்கள்.

ராஜதானியை முனிவன் நெருங்கியதும்,

சளசள எனமழைத்
தாரை கான்றன,
குளனொடு நதிகள்தம்
குறைகள் தீரவே!

[கான்றன — சொரிந்தன. குளன் — குளம்.]

பஞ்சம் தீர்ந்தது. தன்னை வஞ்சித்து அந்தப் பெண்கள் நாட்டுக்கு அழைத்துவந்து விட்டார்கள் என்று தெரிந்தும், முனிவன் அந்த நாடு தன் வருகையால் நன்மை பெற்றதென்று அறிந்து கொண்டு கோபம் கொள்ள வில்லையாம்; கருணைகூர்ந்து ரோம பாதனை ஆசிர்வதித்தானாம். அரசனுடைய மகளான சாந்தை என்பவளையும் மணந்து கொண்டு அந்தத் தவசி நகரத்திலேயே இல்லற வாழ்க்கை நடத்தத் தொடங்கிவிட்டானாம்.

வசிஷ்டன் சொன்ன இந்தக் கதையைக் கேட்டதும் தசரத சக்ரவர்த்தி, "அப்படியா செய்தி? அந்தச் சகோதர மன்னனுடைய நாட்டுக்கு நான் இப்பொழுதே போய் அந்த முனிவனை அழைத்து வருவேன்" என்று புறப்படுகிறான் வாத்திய கோஷங்களுக்கும், பெண்கள் பாடும் 'பல்லாண்டு'களுக்கும், அந்தணர் கூறும் ஆசிகளுக்கும் இடையே. "இன்றே உங்கள் துன்பமும் தீர்ந்தது!" என்று தேவர்கள் பூமழை பொழிய, அந்த மழைக்கிடையே செல்லுகிறது சக்ரவர்த்தியின் இரத்தினங்கள் இழைத்த இரதம்.



சித்ர ராமாயணம்

பி. ஸ்ரீ.

17. தியாகமும் யாகமும்

காரியம் பெரிதென்று சக்ரவர்த்தி தன் கௌரவத்தையும் மறந்து நேரில் போய் ரோம பாதனிடம் செய்தி சொல்லி விட்டு அயோத்தியா புரிக்குத் திரும்பினான். தான் போய்த் தரிசிக்க வேண்டிய மன்னர்பிரான், தன்னைப் பார்க்க வந்து விட்டானே! — என்ற குதூகலத்துடன் ரோம பாதன் கலைக்கோட்டு முனிவனை அணுகி, முதல் முதல் சிபிச் சக்ரவர்த்தி என்ற ஜீவகாருண்ய மூர்த்தியின் புகழைப் பிரஸ்தாபிக்கிறான். பிறகு அந்தப் புகழிலே பூத்த தரும மூர்த்தியென்று தசரத சக்ரவர்த்தியின் திருப் புகழையும் மாட்சியையும் பாடுகிறான், கட்டியம் பாடுவது போலே. கடைசியாக அத்தகைய பெருமை வாய்ந்த அயோத்தியா பட்டணத்திற்குப் போய் வரும்படி முனிவனை வேண்டிக் கொள்ளுகிறான் :

'புறவொன்றின் பொருட்டாகத்
துலைபுக்க பெருந்தகைதன்
புகழில் பூத்த
அறன்ஒன்று திருமனத்தான்,
அமரர்களுக்(கு) இடர்இழைக்கும்
அவுணர் ஆயோர்
திறல்உண்ட வடிவேலான்,
தெசரதன்என்(று) உயர்பிர்த்திச்
செங்கோல் வேந்தன்,
விறல்கொண்ட மணிமாட
அயோத்திநகர் அடைந்(து),இவண்நீ
மீடல்' என்றான்.

[புறவு—புறா. துலை—தராசுத் தட்டு. பெருந்தகை—பெருங்குண முள்ளவன். அறன்—அறம். ஒன்று—ஒன்றிய; பொருந்திய. அமரர்—தேவர். அவுணர்—அசுரர். ஆயோர்—ஆகியோர்; ஆனவர்கள். திறல்

உண்ட-திறமையை அழித்த. வடி — வடித்த; கூர்மையுள்ள. விறல் — பெருமை. இவண் — இங்கே. மீடல் — மீண்டு வருவாயாக.]

கருணை, இரத்தம், கண்ணீர்

ஒரு புறாவைக் காப்பாற்றுவதற்காக, "என் உடம்பிலிருந்து தசையை அரிந்து கொடுப்பேன்!" என்று வாக்களித்த அந்தத் தியாக மூர்த்தியின் பெயரையும் புகழையும் அறியாதவர் உண்டோ? புறாவை இரையாக்கிக் கொள்ள விரும்பிய பருந்து அன்று கேட்டதெல்லாம், அந்தச் சிறு புறாவின் எடை அளவிற்கு வேண்டிய தசைதான். ஆனால்—என்ன அதிசயம்!— சிபி தன் தசையை அரிந்து வைக்க வைக்க எடை நிறைய வில்லையாம்.





இரத்தம் பெருகப் பெருகச் சிபி சக்ரவர்த்தி தன் உறுப்புக்களை ஒவ்வொன்றாக அறுத்து வைத்தான். அப்படி வைத்துப் பார்த்தும் எடையை நிறைசெய்ய முடியாமல், முடிவில் தானே தராசுத் தட்டில் ஏறி யிருந்தானும். என்ன அதிசயமான துலாபாரம்! அப்படி யிருந்து, "பருந்தே! என்னையே இரையாகக் கொண்டு விடு: அந்தப் புறாவை மட்டும் விட்டு விடு" என்றானும்.

உடனே எடை நிறைந்தது. குவிந்த பறவைகளின் வடிவத்திலே வந்திருந்த தேவர் கள், "என்ன கருணை! என்ன மகத்தான தியாகம்!" என்று வியந்து கொண்டாடினர் களாம்.

உடம்பின் வலது பக்கத்திலிருந்து சிபி தசையை அறுத்து வைத்துக் கொண்டே வந் தானும். அப்போது கண்ணீர் வந்து விட்ட தாம் — பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு மட்டுமல்ல; சிபிக்கும் கூட. "ஓ, அழுகி றாயே! உன் சதை வேண்டாம்" என்று தெய்வப் பருந்து சொல்லி விட்டதாம். அதற் குச் சிபி, "நன்றாய்ப் பார்: இடது கண் தானே கண்ணீர் வடிக்கிறது? 'வலது பக் கத்திற்குக் கிடைத்த பாக்கியம் எனக்கு



இல்லையா?' என்றுதானே இடது பக்கம் அழுகிறது?'' என்று பதி சொன்னனும்.

"தியாக உலகிலும் இவனே சக்ரவர்த்தி!" என்று கடுந் தவசியான கலைக்கோட்டு முனியும் ஒப்புக் கொள்ளத் தானே வேண்டும்? மனக் கோணலோடு கூடிய மனிதர்களையும் விலங்குகளாய் (மிருகங்களாய்)க் கரு திய அந்த முனியும் இந்தத் தியாகமூர்த்தியைத் தெய்வ சமானனுக மதிப்பா னல்லவா? அத்தகைய புகழிலே — அந்தத் தியாகப் பரம்பரையிலே — மலர்ச்சி பெற்ற மனத்தையுடைய தசாதனும் பரோபகாரத்துக்காகவே உடம்பையும் உள்ளத்தையும் தன் முழுப் பலத்தையும் அர்ப்பணம் செய்திருக் கிறுன் என்பது குறிப்பு. இத்தகைய பரோபகாரியின் வேண்டுகோளை நிறைவேற்றுவது நமது தருமம் என்பதையும் பக்குவமாய்க் குறிப்பிடுகிறுன் ரோம பாதன்.

ஆசி பூத்துக் கனிந்தது

"இந்த வரம் தந்தோம்" என்று சொல்லி விட்டுச் சாந்த மூர்த்தி யான முனிவன் சாந்தை என்ற தன் மனைவியுடன் அயோத்திக்குப் பயண மானுன். அந்த வருகையை அறிந்து கொண்ட தசாதனுக்குத் தான் என்ன குதூகலம்! அவனைச் சேர்ந்தவர்களுக்குத் தான் குதூகலம் கொஞ் சமோ?

எழுந்தனன், பொருக்கென
இரதம் ஏறினன்;
பொழிந்தன மலர்மழை;
ஆசி பூத்தன;
மொழிந்தன பல்லியம்;
முரசம் ஆர்த்தன;
விழுந்தன தீவினை
வேரி னேடுமே.

[பொருக்கென—விரைவாக. ஆசி — ஆசீர்வாதங்கள். ஆர்த்தன — ஆரவாரம் செய்தன. பல்இயம் — பல வாத்தியங்கள்.]

தசாதன் விரைவாக எழுந்து ரதம் ஏறியதும், பூக்களை மழையாகப் பொழிந்து உத்ஸாகத்தை வெளியிட்டார்கள் பக்கத்தில் இருந்தவர்க ளெல்லாம். பெரியோர்களுடைய ஆசீர்வாதங்களும் பூவோடு பூவாக மலர்ந்து சக்ரவர்த்தியைச் சூழ்ந்து சென்றனவாம். இந்தக் குதூகலத்தை முரசு முதலிய வாத்தியங்களும் பேசி முழக்கினவாம். ஆனல் இந்தக் கொண்டாட்ட மெல்லாம் தீவினைகளுக்குத் தான் திண்டாட்டமாகி விட் டது! "தீவினைகள் வேரோடு விழுந்து விடும் வெகு விரைவாக!" என்பது சூட்சும தரிசிகளுக்குப் புலனுகி விட்டதாம்.

இக் கருத்துக்களை எவ்வளவு ரஸமாய்க் கூறுகிறது இந்தப் பாட்டு! மலர்கள் மழை போலப் பொழிவதும், ஆசிகள் மலர்கள் போலப் பூத்து வரு வதும் — ஆஹா, என்ன அழகான கற்பனை! வாத்தியங்கள் மனிதர் போல் மங்களம் பேசுகின்றனவாம்: ஆம், கீத வாத்திய விநோதங்க ளல்லவா?

இப்படி யெல்லாம் நடக்கும்போது, தசரத வம்சம் தழைக்கத் தருமம் தழைக்க, தீவினை — அதர்மம் — வம்ச நாசமாகி விட்டதாகத் தியானத்தி லிருக்கும் முனிவர்களும் யோகிகளும் ஆனந்தக் கனவுகள் கண்டு ஆசி கூறு வதிலேதான் என்ன ஆச்சரியம் இருக்கிறது!

அந்த மங்கள பேரிகைகளின் முழக்கங்களுக் கிடையே கலைக் கோட்டு முனிவனைக் கண்ணுற்றதும், "நம்முடைய மனத்தில் மலை போலிருந்ததே துயரம், அந்த மலையும் விழுந்து தவிடு பொடியாகி விட்டது!" என்று தசரத சக்ரவர்த்தி மகிழ்ந்து போவதிலேதான் என்ன அதிசயம் இருக்க முடியும்!

அரையிலே மரவுரியும் மேலே மான்தோலும் தரித்து, குடையும் பிரமதண்டமும் கமண்டலமும் கைகளில் தரித்து, தவங்களெல்லாம் ஓர் உருவம் தரித்து வருவது போல வந்த கலைக்கோட்டு முனிவனைக் கவிஞன்,

முதிய நான்மறைக்
கொழுந்துமேல் படர்தரக்
கொளுகொம்(பு) ஆயினான்

[முதிய — பழமையான. நான்மறை — நாலு வேதம். படர்தர — படர. கொளுகொம்பு — கொழுகொம்பு.]

என்று எவ்வளவு அருமையாக வருணிக்கிறான், பாருங்கள்!

வேதமும் ஞானமும் படர்கொடிகள்; அந்தக் கொடிகள் படர்ந்து பூவும் கனியுமாகப் பொலிவதற்கு ஆதாரமான 'கொள் கொம்பு' போன்றவர்கள், சாந்த மூர்த்திகளான பெரியோர்களே — என்பது குறிப்பு.

சக்ரவர்த்தி முனியரசை ராஜ சபைக்கு அழைத்து வந்து உபசரித்தான். "உன் அருளைப் பெற்ற எனது பழைய வம்சம் இனிமேல் அரசாட்சியில் நிலைபெறும்!" என்று ஜாடையாகத் தனது மரபு அற்றுப் போகாமல் தழைத்து வளர்ச்சி பெற வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு ஸ்தோத்திரம் செய்தான். கலைக்கோட்டு முனிவனும் தசரதனைக் குளிரப் பார்த்து, "ராஜாதி ராஜனே! நீ நல்லவன்; நல்ல நெடுந்தவமுடைய வசிஷ்ட முனிவனையும் துணையாகப் பெற்றிருக்கிறாய்; அந்த ஆசியும் பூத்திருக்கிறது!" என்று உத்ஸாகப் படுத்தினான்.

அப்போது சக்ரவர்த்தி வெகு வினயமாய்,

உலப்பில்பல் ஆண்டெலாம்
உறுகண் இன்றியே
தலப்பொறை ஆற்றினென்;
தனயர் வந்திலர்;
அலப்புநீர் உடுத்தபார்
அளிக்கும் மைந்தரை
நலப்புகழ் பெறஇனி
நல்க வேண்டுமால் (கை. 260)

[உலப்பில் — முடிவில்லாத. பல் — பல. உறுகண் — துன்பம். தலப்பொறை — பூமிபாரம். ஆற்றினென் — தாங்கினேன். அலப்புநீர் — அலம்புநீர்; ஒலிக்கிற நீரையுடைய கடல். பார் — உலகம். அளிக்கும் — காக்கும். நலப்புகழ் — சிறந்த புகழ். நல்க வேண்டும் — அருள வேண்டும்.]

என்று வேண்டிக் கொள்ளுகிறான்.

வசிஷ்டனிடம் கூறியதுபோல் கலைக்கோட்டு முனிவனிடத்திலும் தனக்குப் பின் பூமிபாரம் தாங்கிப் பணி செய்யப் புதல்வர் வேண்டும் என்றுதான் கேட்கிறான் தசரதன். கலைக்கோட்டு முனிவன் ஞான திருஷ்டியால் விஷயத்தை அறிந்துகொண்டு, "நல்லது: வருந்தப்படாதே; இந்த உலகத்தை மாத்திரமோ? எல்லா உலகங்களையும் காப்பாற்றும் சக்தி வாய்ந்த பிள்ளைகள் பிறப்பார்கள்! அதற்கு வேண்டிய யாகத்தை இன்றே, இப்போதே, இந்த இடத்திலேயே செய்யத் தொடங்க வேணும்" என்று துரிதப்படுத்துகிறான். கலைக்கோட்டு முனிவனுடைய ஆசியும் பூத்துக் கனிந்து விட்டது.

புத்திரகாமேஷ்டி யாகம் நடைபெறுகிறது. யாக குண்டத்து அக்கினியிலிருந்து பூதமொன்று புறப்படுகிறது, அக்கினி சிகைபோலச் சிவந்த தலைமயிரோடும் கண்களோடும்! அதன் கையிலே செம்பொன் மயமான தட்டு; அந்தத் தட்டின் மேல் அமிர்த மயமான பிண்டம்......

இந்தப் பரம சாதுவின் யாகத்தை வியாஜமாகக் கொண்டு தோன்றப் போகிறான் தியாக மூர்த்தியாகிய புருஷோத்தமன்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

18. ராமாயணம் அரும்பியது

அமிர்தத் தட்டைத் தரையிலே வைத்து விட்டுப் பூதம் அந்த ...ாமாக்கினியிலே பாய்ந்து, வந்த வழியே மறைந்து போய் விட்டதாம். ...போது கலைக்கோட்டு முனிவன் சக்ரவர்த்தியை நோக்கி, "இந்த ...ந்த உணவை நீ உன் பட்டமகிஷிகளுக்கு முறைப்படி வழங்குவாயாக" ...று கட்டளை யிட்டான். அப்படியே தசரதனும் முதலில் கௌசல்யா ...க்கு அந்த உணவில் ஒரு பகுதியும், பிறகு கைகேயி கையில் ஒரு பகுதி ... சுமித்திரை கையில் ஒரு பகுதியுமாகப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, ...டல் சிந்திக் கிடந்ததையும் சுமித்திரைக்கே அளித்து விட்டான். இந்த ...மாக யாகம் முற்றுப் பெற்றதும் கலைக் கோட்டு முனிவன் அக ...ந்து தசரதனை வாழ்த்தி, ரோமபாதனது நகரத்திற்குத் திரும்பிப் ...ய்விட்டான்.


பாக்கியத்திலே பங்கு

கௌசலை பகவானையே புதல்வனாகப் பெறும் பாக்கியத்தைப் ...றுவிட்டாளாம்:

ஒருபகல் உலகெலாம்
உதரத் துள்பொதிந்(து)
அருமறைக்(கு) உணர்வரும்
அவனை, அஞ்சனக்
கருமுகில் கொழுந்(து)எழில்
காட்டும் சோதியைத்,
திருவுறப் பயந்தனள்,
திறம்கொள் கோசலை.

ஒரு பகல்—ஒரு காலத்தில்; (இங்கே) பிரளய காலத்தில். உதரம்—... அருமறை—அருமையான வேதம். உணர்வுஅரும்—உணர்ந்து

கொள்வதற்கு அருமையான. அஞ்சனம்—மை. முகில்—மேகம். எழில்—அழகு. திரு—செல்வம்; பாக்கியம். உற—அதிகரிக்கும்படி. பயந்தனள்—பெற்றாள்.]



உலகங்களை யெல்லாம் தன்
வயிற்றிலே அடக்கி வைத்து
காப்பாற்றிய அகில லோக
ஜோதியாகிய பெருமாளை
கௌசலை தன் வயிற்றில்
அடக்கி வைத்திருந்து பெ
றெடுத்தாளாம், பிள்ளையாக
எப்பேர்ப்பட்ட பாக்கியசாலி

பாக்கியம் இவளுக்குத்தான
கோசல நாட்டிற்கு மட்டுமா
இந்த உலகத்திற்கு மட்டுமா
பகவான், வயிற்றிலே வைத்
ரட்சிக்கிறானே அருமையாக
அந்த உலகங்களெல்லாம் பங்
கொண்டனவாம் கௌசல்ய
தேவியின் பாக்கியத்திலே
இவளுடைய புத்திர சம்பத்
உலக மக்களுக் கெல்லாம் இ
பர சம்பத்தாயிற்று! சாத
களுக் கெல்லாம் ஆத்ம சம்ப
தாகி விட்டது!



(க191)

"கருமுகில் தாமரைக் காடு பூத்து......" வருவது போல வந்து தேவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்த அதே ஸௌந்தரிய ஜோதி ராக்ஷஸ இருள் நீங்க வந்து அவதரித்தான் — என்பது தோன்ற, இங்கும் "கருமுகில் - கொழுந்து எழில் காட்டும் ஜோதி" என்று சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

கைகேயி பரதனைப் பெற்றாள். சுமித்திராதேவி லட்சுமணனையும், சத்ருக்னனையும் பெற்றாள்.

ஆனந்தத்திலும் பங்கு

இப்படித் தசரதனுக்கு நாலு பிள்ளைகள் பிறந்ததும், மண்ணுலகத்தோடு மேலுலகமும் ஆடிப் பாடி ஆனந்தம் அடைந்ததாம், "துஷ்ட ராட்சஸர்கள் தொலைந்தே போனார்கள்!" என்று:

50. ஆடினர் அரம்பையர்;
அமுத ஏழிசை
பாடினர் கின்னரர்;
துவைத்த, பல்லியம்;
'வீடினர் அரக்கர்' என்(று)
உவக்கும் விம்மலால்,
ஓடினர்; உலவினர்
உம்பர் முற்றுமே! (க.286)

[அரம்பையர்—தேவ மாதர்கள். அமுத ஏழிசை - அமிர்தம் போன்ற ஏழு ஸ்வரங்கள். துவைத்த—ஒலி செய்தன. பல்லியம் - பல வாத்தியங்கள். வீடினர் - அழிந்தார்கள். விம்மல் - பூரிப்பு. உலவினர் - உலாவினார்கள்.]

தசரதனுடைய ஆனந்தமோ வேறு விதம்: "ராஜ்ய பாரத்திற்குப் பிள்ளை" என்ற அந்த நோக்கம் கூட மறந்துவிட்டது, முனிவனோடு போய்க் குழந்தைகளைப் பார்த்ததும். இந்தச் செல்வம் பெற்ற ஆனந்தத்திலே,

51 "இறைதவிர்ந் திடுகபார்,
யாண்டோர் ஏழ்; நிதி
நிறைதரு சாலைதாழ்
நீக்கி, யாவையு(ம்)
முறைகெட வறியவர்
முகந்து கொள்கென—
அறைபறை" என்றனன்
அரசர் கோமகன். (க. 289)

[இறை—வரி. தவிர்ந்திடுக—நீங்குவதாக. பார் - (இங்கே) ராஜ்யம். யாண்டு ஓர் ஏழ் - ஒரு ஏழு வருஷ காலம். நிதி நிறைதரு சாலை - பொக்கிஷ சாலை. தாழ் - தாழ்ப்பாள். முறைகெட - முறைமையில்லாமல்; (அதாவது) அவரவர் விரும்பியபடி. கொள்கென - கொள்வாராக என்று. அறை பறை - பறை அறைந்து செய்தி சொல்லு.]

"வரிவஜா ஒரு வருஷத்திற்கு அல்ல; இரண்டு வருஷத்திற்கு அல்ல; ஏழு வருஷ காலத்திற்கு!" என்று நாடெங்கும் முரசறையும்படி கட்டளை

விட்டான் சக்ரவர்த்தி. அந்தக் கட்டளையினால் கூட அந்த நிலையில் திரு ஏற்படவில்லை. "அரசாங்கத்தின் பொக்கிஷ சாலைகளை யெல்லாம் திற வையுங்கள்; தாழ்ப்பாளை உருவி எடுத்து விடுங்கள்!" என்று முழக்கி டான் உத்தரவுகளை. "கதவுகளை உடைத்து விடுங்கள்!" என்று உத் தான் போடவில்லை. ஏன் இந்தப் பைத்தியம்?

பொக்கிஷமெல்லாம் கொள்ளை போய்விடுமே? "போகட்டும்: கள் வேண்டியபடி வாரிக் கொண்டு போகட்டும்!" என்று எண்ணித் அப்படி உத்தரவு போட்டானும்.

பைத்தியம் அதிகரிக்கிறது. "சிறைப்பட்டிருந்த பகையரசர் கெல்லாம் விடுதலை! இன்றே, இப்போதே விடுதலை! அந்தக் கதவுகளை திறந்து விடுங்கள்" என்கிறானும். "போர்த் தொழில் ஒழிந்து போ டும்!" என்கிறான். அந்தக் கதவைத்தான் அடைத்து வைக்க யோசி

ராமனது வசீகர சக்தி

இப்படியெல்லாம் ஆனந்த சாகரத்திலே மூழ்கிப்போன சக்ரவர் ராமனிடம் விசேஷ அன்பு கொண்டிருந்தான்; ராமனை உயிராகக் க னான்—என்றால் போதுமா? ராமனை அல்லாமல் தனக்கென்று வேறாக உயிரும் இல்லை; உடம்பும் இல்லை!—என்றே எண்ணியிருந்தானும்:

52 காவியும் ஒளிர்தரு
கமலமும் எனவே
ஓவிய எழிலுடை
ஒருவ னைஅல(து)ஓர்
ஆவியும் உடலமும்
இலதென, அருளின்
மேவினன் உலகுடை
வேந்தர்தம் வேந்தன். (கு. 371)

[காவி - நீல மலர்கள். ஒளிர்தரு - ஒளிசெய்கின்ற. ஓவிய எழி சித்திரத்தில் எழுதி வைத்தது போன்ற அழகு. ஒருவன் — (இங் ஒப்பற்ற ராமன். உடலம் - உடம்பு. அருளின் - அருளோடு.]

நீல மலர்களுக்கு இடையே மலர்ந்த செந்தாமரை மலர்கள் என சொல்லும்படி அந்த நீல மேனியும் அவயவங்களும் அவ்வளவு திவ்யமா சோபிக்கின்றனவாம். யாரோ ஒரு சித்திர நிபுணன் தன் உள்ளத்தி வளரும் தெய்விக அழகை எழுதி யெழுதிப் பார்த்து எப்படியோ சி ரித்துக் காட்டி விட்டது போலத் தோன்றுகிறதாம், ராமனது ரூப சி ரம். இத்தகைய குழந்தை தசரதனுடைய உணர்வையும் உயிரை ஒருங்கே கொள்ளை கொண்டதில் என்ன ஆச்சரியம்!

ஞான வசீகரம்

பிள்ளைகள் ஆண்டிலும் வளர்ந்து, அழகிலும் வளர்ந்து அறிவி வளர்ந்து வருகிறார்கள், வசிஷ்ட முனிவனுடைய குரு குலத்திலே.

அழகிலும் புற அழகிலும் ஒருங்கே வளர்ந்து வருகிறார்கள், — 'என்ன அதிசயமான குரு குலக் கல்வி?' என்று பிரமிக்கும்படி. இவர்களில், ராம லட்சுமணர்கள் ஒருவரை யொருவர் பிரிவதில்லை; ஆறு, குளம், சோலை முதலான இடங்களில் விளையாடும் போதும் பிரிவதில்லை. அப்படியே பரத சத்ருக்னர்களும் ஒருவரை யொருவர் பிரியாமலே கல்வி கற்று வந்தார்கள்; குதிரை யேற்றம் முதலான போர்க் கலைகளில் பயிற்சி பெறும் போதும் பிரியாமலே யிருந்தார்கள். இத்தகைய குருகுலக் கல்வியால் கிடைத்த ஞான சௌந்தரியமும் ராமனுடைய வசீகர சக்தியை அதிகப்படுத்தி யிருக்க வேண்டும்.

கருணையின் வசீகரம்

பிள்ளைகள் முனிவர்களோடும் பழகுவார்கள்; சாதாரண ஜனங்களோடும் பேதமில்லாமல் பழகுவார்கள். ஆச்ரமங்களிலே போய்க் கல்வி கற்றுத் திரும்பி வரும்போது, அவர்களை அந்த நகர ஜனங்கள் எதிர் கொள்ளப் போவார்கள் குதூகலமாக.

அப்போது ராமன் அவரவர் குடும்ப யோக க்ஷேமங்களை விசாரிக்கும் அழகைத்தான் பாருங்கள்! அந்தக் குழந்தை - முகத்திலே முதிர்ந்த — எவ்வளவோ வயது முதிர்ந்த — கருணையையும் பாருங்கள்; ராமனுடைய வசீகர சக்தியின் உயிர்நிலையான பகிரங்க ரகசியத்தையும் இதோ பாருங்கள்:

53\. எதிர்வரும் அவர்களை
எமையுடை இறைவன்,
முதிர்தரு கருணையின்
முகமலர் ஒளிரா,
'எதுவினை? இடர்இலை?
இனிதுநும் மனையும்?
மதிதரு குமரரும்
வலியர்கொல்?' எனவே ... (பக். 311)

[ஒளிரா - ஒளி வீசப்பெற்று. வினை - தொழில். மதிதரு - அறிவிலே வளரும்.]

இப்படி யெல்லாம் வினவும் அந்த முகம் — ஆஹா, — கருணையால் எப்படி மலர்ந்து ஜொலிக்கிறது!

"ஐயா! உங்கள் தொழில் என்ன? துன்பம் ஒன்றும் இல்லையே? உங்கள் மனை இனிதாக இருக்கிறதா? உங்கள் குமாரர்கள் அறிவிலும் சக்தியிலும் ஓங்கி வளர்ந்து வருகிறார்களா, க்ஷேமமாக?" என்றெல்லாம் கேட்கிறானும் குழந்தை-ராமன்.

'கருணாநிதி' 'கருணாமூர்த்தி' 'கருணாலயன்' 'கருணாகரன்' என்றெல்லாம் ஜனங்கள் போற்றும் ராமனுடைய கருணை எப்படி அரும்பி வருகிறது, பாருங்கள் — குழந்தைப் பருவத்திலேயே! இந்தக் கருணை — அரும்பு ராமாவதாரமாக மலர்ந்து கனிந்து விடுகிறது என்று சொல்லலா மல்லவா?



சித்திர ராமாயணம்

54

பி. ஸ்ரீ.

19. ரத்தின மாலையும் புகழ் மாலையும்

புத்திர சம்பத்தோடு கூடிய தசரத சக்ரவர்த்தியின் களிப்பு, கரை பாட முடியாத ஒரு கடல் போலிருந்தது. அவ்வளவு களிப்புடன் அர சாட்சி செய்யும்போது அந்தச் சந்திரவட்டக் குடைக்கே ஒரு புதிய குளிர்ச் சியும் ஒளியும் வந்து விட்டனவாம். பட்சபாதமற்ற பாதுகாப்பின் அறிகுறி யாகிய அந்தக் குடை நிழலில் தங்கிய ராஜ்யம் முழுவதும் ஒரு புதிய சோபை பெற்று விளங்கியது. அத்தகைய புத்திர சம்பத்தோடு கூடிய வெற்றியை வெற்றி முரசுகள் முழங்கிக் கொண்டிருந்தன. முனிவர்களும் அந்த ஆட்சியைப் புகழ்ந்தார்கள்; வாழ்த்தினார்கள்; துதித்தார்கள்..

இந்த விதமாய்க் களிப்புக் கடலிலே மூழ்கி ஆட்சி செய்து வரும் காலத்திலே, ஒரு நாள் தசரதன் சபா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான். சக்ரவர்த்தி வந்து சேர்ந்ததும், அந்த ரத்தின கசிதமான மண்டபமும் ஒரு புதிய பொலிவு பெற்றது போலத் தோன்றியது. அந்த ராஜ சபையும், "தேவ ராஜாவின் கொலு மண்டபம்தானோ?" என்று சந்தேகிக்கும் படி அவ்வளவு மாட்சியோடு திகழ்ந்தது. அந்த வானளாவிய மண்டபத் தின் சிற்பத் திறமையும் அப்படி யிருந்தது.

ராஜ சிங்கமும் தவராஜ சிங்கமும்

தெய்வச் சிற்பம் என்று பிரமிக்கும்படி யிருந்த அந்த மண்டபத் திலே, பரிசுத்தமான நீதி, உண்மை, நன்மை முதலான லட்சியங்களுக்கும் அவ்வளவோர் பொறுப்பிற்கும் அறிகுறியாகத் திகழ்ந்த சிங்காதனத்திலே, தன்மையான அந்த மெத்தையில் இன்று அமர்ந்ததும், "நரேந்திரனோ? தேவேந்திரன் தானோ?" என்று ஐயமுற்றுத் தெளியும்படி அவ்வளவு புதிய மாட்சி வந்து விட்டதாம், ராஜ சிங்கம் போல வீற்றிருந்த சக்ரவர்த் திக்கும்.

இந்த ராஜ சிங்கத்தின் முன் தவராஜ சிங்கமாகிய விசுவாமித்தி
தோன்றுகிறான்:

54 மடங்கல்போல் மொய்ம்பினான்
முன்னர், மன்னுயிர்
அடங்கலும் உலகும்வே(று)
அமைத்துத் தேவரோ(டு)
54 இடங்கொள்நான் முகனையும்
படைப்பன் ஈண்(டு)எனாத்
தொடங்கிய துனியுறு
முனிவன் தோன்றினான். (க. 317)

[மடங்கல் — சிங்கம். மொய்ம்பு — வலிமை. மன் உயிர் அ
கலும் — பொருந்திய உயிர்கள் எல்லாவற்றையும். இடம்கொள் — இ
தைக் கொண்
நான்முகன்— ந
முகங்களுடை
பிரமதேவ
ஈண்டு — இப்
பூதே. எனா
என்று. துனி
—கோபம் மிக்
பிரமசிருஷ்
குப் போட்டி
விசுவாமித்
சிருஷ்டி எ
சொல்லும்
ஜீவராசிகளை
உலகங்களை



தவர்களையும், படைப்புக் கடவுளையும் கூட "இதோ படைத்து விடு கிறேன்!" என்று தொடங்கிய அந்தப் பெருங்கோபத்திலே தான் எவ்வ ளவு தபோபலம் பொதிந்து கிடந்தது! அத்தகைய தவ ராஜேந்திரன், தசரதன் எதிரில் எதிர்பாராத நிலையிலே திடீரென்று தோன்றி விட்டான். வாயில் காப்போர் வந்து செய்திசொல்லுவதற்கு முன்பே, — விஷயம் தெரிந்து தசரதன் போய் எதிர் கொள்வதற்கு முன்பே — அந்தக் கட்டுக் காவல்களை யெல்லாம் அவ்வளவு அவசரமாக, அவ்வளவு அதிகார தோரணை யில், கடந்து விட்டான் முனிவன் என்பது குறிப்பு.]

இப்படித் 'திடும்பிரவேசம்' செய்த முனிவனைக் கண்டதும், எவ்வளவு அவசரமாகச் சிங்காசனத்தை விட்டுச் சக்ரவர்த்தி எழுந்திருக்கிறான்; துள்ளி எழுந்து,—ஒரு வாலிபனைப் போல் பாய்ந்து வந்து — அடிகளில் விழுந்து வணங்குகிறான் :

55. வந்துமுனி எய்துதலும்
 மார்பின்அணி ஆரம்
அந்தரதலத்(து)இரவி
 அஞ்சஒளி விஞ்சக்,
கந்தமல ரில்கடவுள்
 தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடி(து)
 எழுந்(து)அடி பணிந்தான். (க.318)

[எய்துதலும் - அடைந்ததும். அணிஆரம் - அணிந்துள்ள இரத்தின மாலை. அந்தரம் - ஆகாசம். இரவி - சூரியன். விஞ்ச – மிஞ்ச; மிகு தியாக. கந்த மலர் - வாசனையுள்ள தாமரை மலர். கந்தமலரில் கடவுள் – பிரமதேவன். கடிது – விரைவாக.]

பிரம்ம தேவனோடும் போட்டி போடத் துணிந்த விசுவாமித்திர மக ரிஷியைக் கண்ட தசரத சக்கரவர்த்தி, பிரமதேவன் வரவு கண்ட தேவேந்திரன் போல விரைந்து எழுந்து அடி பணிந்தான் என்று கூறும் கவிஞன் அந்த விரைவையும் எவ்வளவு பொருத்தமாய்க் காட்டுகிறான்!

எழுந்து அடி பணியும் அந்த வேகத்திலே, சக்ரவர்த்தியின் பரந்த மார் பிலே அணிந்திருக்கும் அந்த ரத்தின ஹாரம் எப்படி ஜொலிக்கிறது பாருங் கள், சூரிய வெளிச்சத்திலே தக தக வென்று! — என்றே காட்டி விடுகி றான் கவிஞன். சூரிய வெளிச்சமும் அஞ்சும்படி அந்த இரத்தினங்கள் அப்படி 'டால்' வீசுகின்றன! —என்றே நமக்கும் தோன்றுகிறது, இந்தக் கவிதைக் கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது.

பிறகு தசரதன் விசுவாமித்திரனுக்கு ஆசனம் அளித்து உபசரித்தான். ரத்தினங்களை நெருக்கமாய்ப் பதித்து மாற்றுயர்ந்த பொன்னால் செய்தி ருந்த அந்த அழகிய ஆசனத்தைச் சக்ரவர்த்தி தானே போய்த் தூக்கிக் கொண்டு வந்து சமர்ப்பித்தான் என்பது குறிப்பு. அந்த ஆசனத்திலே முனிவனை 'அருத்தி'யோடு இருத்தினான்! —என்று கவி வெளிப் படையா கச் சொல்லுகிறான். என்ன அன்பு; என்ன ஆசை! என்ன உபசாரம்; எவ்வளவு உத்ஸாகம்!

தான் தேடிப் போய்த் தபோவனங்களிலே தரிசிக்க வேண்டிய தவ ராஜ சிங்கம் தன்னுடைய நாட்டிற்கே—தன்னுடைய நகரத்திற்கே—வந்து விட்டான், தான் ஆசைதீர வணங்கும்படி! "என்ன பாக்கியம்! ஆஹா, இந்த நாட்டிலுள்ள ஜனங்களெல்லாம் செய்த புண்ணியமாக இருக்கலாமோ?" என்றெல்லாம் பேசத் தொடங்குகிறான்:

நிலம்செய்தவம் என்(று)உணரின்,
அன்று; நெடியோய்! என்
நலம்செய்வினை உண்டெனினும்
அன்று; நகர், நீயான்
வலம் செய்துவணங்கஎளி
வந்தஇது, முந்(து)எம்
குலம்செய்தவம்!' என்(று)இனிது
கூற,முனி கூறும்.

[நிலம் — (இங்கே) இந்த நாடு. உணரின் — உணர்ந்தால்; (இங்கே) ஆலோசித்தால். அன்று — (இங்கே) போதாது. நெடியோய் — பெரியவனே. நலம் செய்வினை — நல்வினை. நகர் — (இந்த) நகரத்திலே. எளிவந்த — எளிதில் வந்த. முந்து — முன்பு. எம் — எங்களுடைய.]

'எங்கள் குலம் செய்த தவம்'

விசுவாமித்திரன் காட்டை விட்டு நாட்டிற்கு வந்திருக்கிறானே, இதற்குக் காரணம் என்ன? காட்டைப்போல் நாடும் தவம் செய்திருக்க வேண்டும்! — என்று ஆலோசிக்கிறான். நாடெல்லாம் சேர்ந்து செய்த தவத்தின் பயனாகத்தான் முனிவன் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று ஆலோசித்தும் அமைதி பெறவில்லை உள்ளம்.

நகரத்திற்கு வந்து, தன்னையே தேடிக்கொண்டு சபாமண்டபத்திற்கும் முனிவன் வந்து விட்டதால், "இந்தப் பெரும் பாக்கியத்துக்கு என் தவப்பயனே — என் நல்வினையே — காரணமா யிருக்கலாமோ?" என்று கூட ஆலோசிக்கிறான் தசரதன், அந்தக் குதூகலத்திலே. ஆனால் அந்தக் குதூகலத்திலும் உள்ளம் திருப்தி பெறவில்லை.

"அடியேனும் குடிகளும் அவ்வளவு தவஞ் செய்திருக்க முடியாது!" என்று உடனே உணர்ந்து, அந்த முடிவைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறான் முனிவனுக்கு.

எனவே கடைசியாக, "எம் குலம் செய்தவம்" விசுவாமித்திரனுடைய வருகைக்குக் காரணமாக இருக்க வேண்டும் — என்கிறான். "எங்கள் குலத்து முன்னோர் யாவரும்—அரசர்களான என் முன்னோரும், அவர்களுடைய கோடிக்கணக்கான குடிகளும் — சேர்ந்து செய்த தவத்தொகுதியே விசுவாமித்திர விஜயத்திற்குக் காரணமாயிருக்க வேணுமென்று சொல்லி, அந்த முனிவனைத் துதி செய்தான், முனிவர்களும் துதிக்கும்படி ஆட்சி செய்து வந்த தசரத சக்கரவர்த்தி.

...ப்படியெல்லாம் துதி செய்வது கேவலம் முகஸ்துதியன்று. புத்திர ...பத்தாகிய பாக்கியத்தை — முக்கியமாக, ராமனைப் பெற்ற அந்தப் ...க்கியத்தை — அனுபவித்துக் கொண்டிருந்த அரசர் பெருமான் முனி ... பெருமானைக் கண்டதும், அந்த மகரிஷியின் ஆசியையும் புத்திரனுக் ...கப் பெற்றுப் பெரு வாழ்வு வாழலாமென்று எண்ணினான்; ஆசைப் ...டான்.

அந்த நினைப்போடு — அந்த ஆசையோடு — விசுவாமித்திரன் வரு ...கையை மகா பாக்கியமாக மதித்தான். இந்த உள்ளக் கிளர்ச்சிதான், ...மேலே சொன்ன துதியாக வெளிப்பட் டிருக்கவேண்டும். அந்தப் புத்திர ...த்தான் அழைத்துப் போக வந்திருக்கிறான்! — என்பது எப்படித் ...தெரியும்?

புகழ் மாலை

தசரதன் சூட்ட வந்த புகழ்மாலையைக் கழுத்தில் வாங்கிக் கொண் ...ளு, கையில் வாங்கிக் கொண்டானா விசுவாமித்திரன்? அவசர அவசர ...த் தானும் சக்ரவர்த்திக்கு ஒரு புகழ் மாலை சூட்டுகிறான். அந்த மாலை ...யத் தசரதன் கழுத்திலேயே போடுகிறான்; "மார்பிலே அந்த ரத்தின ...மாலை. நெஞ்சிலே இந்தப் புகழ் மாலை!" என்று அணிந்து கொள்ளும் ... சூட்டிவிடுகிறான்:

57. என்அனைய முனிவரரும்,
இமையவரும், இடையூ(று)ஒன்(று)
உடையரா னல்,—
பன்னகமும் நகுவெள்ளிப்
பனிவரையும், பாற்கடலும்,
பதுமபீ டத்(து)
அந்நகரும், கற்பகநாட்(டு)
அணிநகரும், மணிமாட
அயோத்திஎன் னும்
பொன்னகரும் அல்லாது,
புகலுண்டோ? இகல்கடந்த
புலவுவே லோய்! 57 (க.320)

[அனைய — போன்ற. முனிவரர் — முனிசிரேஷ்டர்கள். இமைய... — தேவர்கள். பன்னகம் (பல் நகம்) — பல மலைகள். நகு — அவ ...த்துச் சிரிக்கிற. வெள்ளிப் பனிவரை — குளிர்ந்த வெள்ளி மயமான ...கைலயங்கிரி. பதும பீடம் — (பிரமதேவனது சிங்காசனமாகிய) பத்மா ...சனம். கற்பகநாட்டு அணிநகர் — கல்பக விருட்சத்தையுடைய சொர்க்க ...லோகத்திலுள்ள அமராவதி நகரம். பொன்நகர் — அழகிய (பொன் மய ...மான) நகரம். புகல் — சரண்; (இங்கே) புகலிடம்; சரணம் அடை ...தற்கு உரிய இடம். இகல் — பகை; (இங்கே) பகைவர். புலவு — ...மாமிசம். புலவுவேல் — மாமிசம் பொருந்திய வேலாயுதம்.]



முனிவர்களுக்கும், தேவர்களுக்
இடையூரா ஏர்பட்டால், சுவர்
திரிமூர்த்திகளும் தேவேந்திர
இருக்கும் இடங்களைத்தானே தே
போவார்கள்? அந்தப் புகலிட
ளோடு தசரத ராஜதானியா
அயோத்தியையும் சேர்த்துப் பே
கிறான் முனிவன்! "மணிம
அயோத்தி என்னும் பொன்
ரும்" என்று இதை ஒரு பூவே
சொர்க்கமாகவே குறிப்பிடுகிறான்

இப்படிப் பேரைச் சொல்லா
னரைச் சொல்லித் துதி செ
கிறான், அரசனை முனிவன். த
செய்த போதிலும், இந்த ர
ரிஷியின் ரஜோ குணமும் தெ
க்கத்தான் செய்கிறது, எடுத்த எ
பிலே — "என் அனைய முனி
ரும்" — என்னைப் போன்ற சிற
ரிஷிகளும் — என்று பேசத் தொ
கும் போதே.

பக்கத்திலே வசிஷ்டனும் இ
கத்தான் செய்கிறான்: எனி
"வசிஷ்ட மகரிஷியைப் போ
முனி சிரேஷ்டர்களும்" என்
ஆரம்பிக்கவில்லையே விசுவா
திரன்! தசரதனைப் புகழும் போ
"அவன் அப்பேர்ப்பட்ட ர
சிரேஷ்டன் என்றால், நான் எப்பே
பட்ட முனி சிரேஷ்டன்!" என்
தோரணையில் தானே பேசுகிறா

எனினும் தற்புகழ்ச்சி போ
தொடக்கும் இந்தப் பேச்சைத்
ரதனுக்கே புகழ் மாலையாக்கி வி
றான் காரியவாதியாகிய விசுவாமி
ரன் சாதுரியமாக, — இ தற்
மேலான புகழ் மாலையை எந்த அ
னுக்கு எந்த முனிவன் சூட்டி பி
கிறான்! — என்று பிரமிக்கும்

இந்தப் புகழ்மாலை நெஞ்சை
கிடந்து ஜொலிக்க, அந்த ரத்
மாலையின் ஜொலிப்பும் இப்போ
இதற்கு ஓர் அறிகுறியாகத்
காண்கிறது.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ. 57

20. அன்றும் இன்றும் — இனிமேலும்

“என்ன? இப்படியெல்லாம் புகழ்கிறாரே? வெள்ளி மலையோடும் பாற்கடலோடும், பிரம்ம லோகத்தோடும் தேவேந்திர பட்டணத்தோடும் நம்முடைய அயோத்தியா பட்டணத்தையும் சேர்த்துப் பேசுகிறாரே!” என்று தசரதன் எண்ணமிடுகிறான். இப்படிச் சக்ரவர்த்தி எண்ணிக் கொண்டிருக்கும் போதே, “அந்த அமராவதி பட்டணத்துத் தேவ ராஜனும் இந்த அயோத்தியா பட்டணத்து அரசனிடம் வந்துதான் குறை தீர்ந்து போகவேண்டி ஏற்பட்டது!” என்று தொடர்ந்து பேசத் தொடங்குகிறான் விசுவாமித்திர முனிவன். புகழ்மாலை மேல் புகழ்மாலை வந்து விழுகிறது.

தேவேந்திரனுக்கும் உதவிய நரேந்திரன்

“அரசே! அந்த அரசும் (தேவ ராஜ்யமும்) நீ இட்ட பிச்சைதான்!” என்று கூடச் சொல்லி விடுகிறான்.

58 ‘இன்தளிர்க்கற் பகநறுந்தேன்
இடைதுளிக்கும் நிழல்இருக்கை
இழந்து போந்து,
நின்றளிக்கும் தனிக்குடையின்
நிழல்ஒதுங்கிக் குறையிரந்து 59
நிற்ப நோக்கி,
குன்றளிக்கும் குலமணித்தோள்-
சம்பரனைக் குலத்தோடும்
தொலைத்து, நீகொண்(டு)
அன்றளித்த அரசன்றோ,
புரந்தரன்இன்(று) ஆள்கின்ற(து)?
அரச!’ என்றான். (க.322)

[இன் — இனிமையான. கற்பக நறுந்தேன் — கற்பக விருட்ச
தின் நல்ல தேன். நின்றளிக்கும் — நின்று காப்பாற்றும். குன்றளிக்கு
குன்றுகளை ஒத்திருக்கும். குலமணித் தோள் — சிறந்த இரத்தின ஆப
ணங்களை அணிந்த தோள். புரந்தரன் — தேவேந்திரன்.]

கல்பகச் சோலையிலே அரசு வீற்றிருக்கிறானாம் தேவராஜா. அந்த
சிங்காசனம், ஆத்மாவைச் சிறை செய்யும் படாடோபமான அரண்மனை
போன்ற கட்டடங்களில் அமைக்கப் படவில்லையாம். இனிய தளி
ரோடு கூடிய கல்பக விருட்சங்களின் தேன் துளிக்கும் அந்த இனிமை
யான நிழலிலே அமைந்திருக்கிறதாம். நல்லது: அந்தச் சிங்காசனத்தையும் தேவ போகத்தையும் இன்னும் ஒரு தரம் பாருங்கள் :



இன்தளிர்க்கற் பகநறுந்தேன்
இடைதுளிக்கும் நிழல்
இருக்கை

— ஆஹா, என்ன வசதியான, விசாலமான இருப்பு! இத்தகைய ஆசனத்தையா இழந்து விட்டான் தேவேந்திரன் ஒரு சமயம்?

'நிழலின் அருமை வெய்யிலிலே தெரியும்': அந்த நிழலாசனத்தின் அருமையையும் இழந்து தெரிந்து கொண்டானாம் இந்திரன்.

இன்தளிர்க்கற்
பகநறுந்தேன்
இடைதுளிக்கும்
நிழல்இருக்கை
இழந்து
போந்து

என்று விசுவாமித்திரன் சொல்லும் போதே, அரசிழந்த இந்திரனுடைய அந்த மனநிலை அப்படியே பிரதிபலிக்கிறதல்லவா?

தேவ சிங்காசனத்தை இழந்து வந்த தேவ ராஜா — அந்தக் கல்பக நிழலை விட்டுத் தவித்துக் கொண்டே வந்தவன் — தசரதனுடைய குடை நிழலுக்கு வந்துவிட்டான்; இந்தச் சந்திர வட்டக் குடையின் நிழலிலே ஒதுங்கித் தாபம் தீர்ந்தான் என்கிறான் விசுவாமித்திரன். எப்படி? இந்திரன்தான் இறங்கி வந்து இந்த நிழலைப் பெற்றானா? அல்லது இந்தச் சந்திரவட்டக் குடையே உயர்ந்து உயர்ந்து போய்த் தேவலோகத்திற்கும் நிழல் கொடுத்து நின்றதா? அவ்வளவு வேகமாக நடந்தது, அந்தக் காரியம்: இது மண்ணுக்கும் விண்ணுக்கும் ஒரு குடையாக உயர்ந்து நின்றது — என்பது குறிப்பு.

நின்றளிக்கும் தனிக்குடையின்
நிழல்ஒதுங்கிக் குறையிரந்து
நிற்ப நோக்கி,

58

என்று அந்தக் குடையின் கம்பீர நிலையையும், அரசிழந்த தேவ ராஜாவின் பரிதாப நிலையையும் ஒருங்கே சித்திரிக்கிறான் விசுவாமித்திரன்.

தேவேந்திரனுடைய அந்த நிலையை நோக்கியதும் நரேந்திரனாகிய தசரதன் என்ன செய்தான்? உடனே—என்ன செயல் திறன்! — சண்டைக்குக் கிளம்பினான். தேவ ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்ட சம்பரன் என்ற அந்த துஷ்ட அசுரனைக் குலத்தோடு தொலைத்து விட்டான். தொலைத்ததும், தேவ ராஜ்யம் தசரத ராஜ்யத்தோடு சேர்ந்து விட்டதாம். அந்த அரசை, "வசதியான, வசீகரமான ராஜ்யம்; சாதுக்களான தேவ ஜனங்கள்! நம்முடைய மகாராஜ்யத்தின் பகுதியாக இருந்தால் நமக்கும் நல்லது; அவர்களுக்கும் நல்லது தானே?" என்று அப்படியே வைத்துக் கொண்டானா தசரதன்?



அன்றே, அப்போதே, "இதோ மறுபடியும் உனக்கே அளிக்கிறேன்!" என்று சொல்லித் தன் குடை நிழலிலே வந்து ஒதுங்கி யாசித்து நின்ற

அந்த இந்திரனுக்கே அளித்து விட்டானும் அந்த அரசை. தேவ ராஜா இன்று ஆண்டு கொண்டிருப்பது அதே பொன்னகரும் பொன்னுடும்தான்! — என்று விசுவாமித்திரன் சூட்டும் இந்தப் புகழ்மாலை தசரதன் உள்ளத்தைப் பகட்டி அப்படியே வசீகரித்து விடுகிறது.

முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் புகலிடமாகச் சிவபெருமான், மகாவிஷ்ணு, பிரம்ம தேவன், தேவேந்திரன், தசரதன் என்று முதல் முதல் ஐவர்களைக் குறிப்பிட்டான் விசுவாமித்திரன். பிறகு அந்த ஐவருள் ஒருவனான தசரதனே, அவர்களில் வேறொருவனான தேவேந்திரனுக்கும் புகலிடமாக இருந்தான் என்கிறான். "அப்பேர்ப்பட்ட பொல்லாத பேர்வழியான உன்னைத்தான் தேடி வந்தேன், அப்பா!" என்று சொல்லாமல் சொல்லி முடிக்கிறான். அந்தக் குரல்தான் எப்படிக் குழைந்து கொஞ்சுகிறது; கெஞ்சுகிறது!

தசரதன் தலை குனிந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். முனிவனுடைய புகழ்ச்சியைத் தாங்க முடியாமல் நாணித் தலை குனிந்தவன்தான்! எனினும் அமிர்தமாய்ப் பருகிக் கொண்டிருக்கிறான். ஏன்? அரசிழந்த தேவ ராஜாவுக்கும் அரசளித்த அந்தச் செயல் உண்மைதானே? அந்த வீரத்தையும் தியாகத்தையும் தானே விசுவாமித்திரன் அப்படிப் பாராட்டுகிறான்? ஆனால் இந்த மகரிஷியும் இவ்வளவு தூரம் புகழ வேணுமா? விசுவாமித்திரன்தானா இங்கு வந்து இப்படியெல்லாம் புகழ்ந்து பேசுகிறவன்? இந்த முனிவனும் முகஸ்துதிதான் செய்கிறானா? புகழ்ச்சியிலும் ஏன் உண்மை இருக்க முடியாது? உண்மையாகவே ஹிருதயத்திலிருந்து வரும் வார்த்தைதானா? முகத்தை நோக்கி அந்த அகத்தையும் நோக்க விரும்புகிறான் தசரதன்.

இனிச் செய்யும் பணி?

முனிவன் பேசிக் கொண்டிருக்கும்போதே — பேசி முடிக்கும் சமயத்திலே — சக்ரவர்த்தி குனிந்த தலையைக் கொஞ்சம் நிமிர்த்தி நோக்குகிறான். நோக்கியதும், முனிவனுள்ளம் அந்த முகத்தில் அப்படியே பிரகாசிப்பதைக் காண்கிறான். கண்டதும், சக்ரவர்த்தியின் உள்ளத்திலே கடலாகப் பெருகி விடுகிறது மகிழ்ச்சி. அப்பொழுது அவன் என்ன செய்கிறான்? என்ன சொல்லுகிறான்? கவிஞனையே கேட்டுப் பார்ப்போம்:

59. உரைசெய்யும் அளவில்,அவன்
முகம்நோக்கி, உள்ளத்தில்
ஒருவ ராலும்
கரைசெய்ய அரியதொரு
பெருவகைக் கடல்பெருகக்,
கரங்கள் கூப்பி,
'அரசெய்தி இருந்தபயன்
எய்தினன்;மற்(று) இனிச்செய்வ(து)
அருளு' கென்று
முரசெய்து கடைத்தலையான்
முன்மொழியப், பின்மொழியும்
முனிவன் ஆங்கே. (௬-323)

[கரை செய்ய அரியதொரு — கரைபோட முடியாத ஒரு. பெருவகை — பெரு மகிழ்ச்சி. அருளுகென்று — அருளுக என்று. முரசெய்த

— முரசுகள் முழங்குகிற. கடைத் தலையான் — தலைவாசலையுடைய சக்ரவர்த்தி. முன்மொழிய — முன்னே சொல்ல. ஆங்கே—அப்பொழுதே.

"விசுவாமித்திர முனிவன் கூட இப்படியெல்லாம் புகழ்ந்து பாராட்டும்படி அவ்வளவு பெரிய பரோபகாரமா நான் அன்று செய்தது?" என்று அந்தப் பூரிப்பிலே, சந்தோஷ சமுத்திரம் — கரை அறியாத உவகைக் கடல் — அலைமேல் அலையெறிந்து கோஷிக்கத் தொடங்கி விட்டது சக்ரவர்த்தி உள்ளத்திலே. அத்தகைய பெருமகிழ்ச்சி சாமானியர்களை என்ன பாடு படுத்திவிடும்? "ஆம், ஆம்; அப்படி ஒதுங்கி யாசகன்போலத் தான் வந்து குறுகிக் கும்பிடு போட்டு நின்றான்! 'யார்?' என்று கேட்க, 'அடியேன் தான், தெரிய வில்லையா? தேவேந்திரன்!' என்று பதில் சொன்னானே..." என்றெல்லாம் அந்தப் பிரபாவத்தைச் சாங்கோபாங்கமாய்க் கொட்டி முழக்கி விடத் தோன்றுதா?

தசரதனோ அப்படி ஒன்றும் செய்து விடவில்லை. சக்ரவர்த்தியாகவும் பெரியவன்; மனிதனாகவும் பெரியவன்தான். எனவே,

பேருவகைக் கடல்பெருகக்
கரங்கள் கூப்பி,

— பதில் சொல்லத் தொடங்குகிறான். கரை செய்ய முடியாத அந்த உவகைக் கடலையும் அணைபோட்டு அடக்கிக் கொண்டுதான் பேசுகிறான். அந்த அணைக்கு அறிகுறிதான், முனிவன் முன்பு கை கூப்பி அஞ்சலி செய்யும் இந்த நிலை.

பெருமகிழ்ச்சியைப் பெரும் பணிவால் அடக்கிக்கொண்டு, "நான் — என்ன? — அப்படிப் பிரமாதமாகச் செய்துவிட்டேன்?" என்கிறான்.

அரசெய்தி யிருந்தபயன்
எய்தினன்

— அரசனாகி யிருந்த பயனைப் பெற்றேன்; என் பதவிக்கு உரிய கடமையைத் தானே செய்தேன்? அரசு புரிவதும் கைங்கரியம் புரிவதற்கு ஒரு சந்தர்ப்பம் தானே? — என்கிறான். "இனிச் செய்வது அருளுக!" என்று வேண்டிக் கொள்கிறான். "நான் செய்த அந்தப் பழைய செயலைக் குறித்துப் பேச வேண்டாம்; இனிச் செய்ய வேண்டியதை நியமித்தருள வேணும்" என்றுதான் கைங்கரியப் பிரார்த்தனை செய்து கொள்கிறான்.

இப்படித் தசரதன் சொன்னதும், 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' போலாயிற்று விசுவாமித்திரனுக்கு. மேலும் ஆலோசிக்க அவகாசம் கொடுக்காமலே முனிவன் வந்த காரியத்தை வெளியிடத் தொடங்குகிறான். தசரதன் பேசி முடித்தானோ, இல்லையோ?—அந்த வார்த்தையோடு வார்த்தையாகத் தொடுத்து விடுகிறான் ஒரு மாலை போலே, முனிவன் தன்னுடைய காரியப் பேச்சையும் அந்தக் கைங்கரிய விண்ணப்பத்தோடு. இந்த நிலையைக் காட்டத் தான்,

முன்மொழியப் பின்மொழியும்
— முனிவன் ஆங்கே.

என்ற செய்யுளை முடித்துக் காட்டுகிறான் கவிஞனும்.

இப்படிப் பேசத்தொடங்கும் விசுவாமித்திரன் என்ன தான் சொல்லப் போகிறானோ? வந்த காரியத்தை எப்படி வெளியிடப் போகிறானோ? அந்தக் காரியம்தான் என்ன? முனிவன் எவ்வளவு அவசரமாய்ப் பேசினாலும், நாம் அடுத்த வாரம் வரையில் பொறுத்திருந்து கேட்க வேண்டியது தானே?